விலை சதம் 5

பக்கங்கள் 8

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. நட்டாரத் தெரு கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
8 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா " 12-00
1 வருடச் சந்தா " 24-00
மானேஜர்
"சுதந்திரன்"
194 A, நட்டாரத் தெரு கொழும்பு.

Phone: 3411

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

நாமார்க்கும் குடியல்லோம்

புரட்டாதி 4 | கொழும்பு, சர்வஜித்து வரு கார்த்திகை 5 வெள்ளி வியாழக்கிழமை | Colombo, November, 20. 1947 | ஹிஜ்ரி 1367 முஹர்ரம் பிறை 6 | இதழ் 170

இன்று இளவரசி எலிஸபெத் கலியாணம்

பக்கிங்ஹாம் அரண்மனையில் ஆடம்பர விருந்தும் நடனமும்

உலகெங்குமிருந்து வந்துள்ள பரிசுக்குவியல்

லண்டன், நவ. 19

நாலு அரசர்களும் நாலு ராணிகளும் இன்று பக்கிங்ஹாம் அரண்மனையில் நடைபெற்ற விருந்து வைபவக்கிற்குச் சமூகமளித்தனர். இவ்விருந்து மன்னர் பிராணாலும் ராணிபாலும் எலிசபெத் இளவரசிக்கும் வரதகாதலர் லெப்டினென்ட் மவுண்ட் பேட்டனுக்கும் அளிக்கப்பட்டதாகும்.

மன்னரும் ராணியும் வாசற்படியில் நின்று விருந்துக்குச் சமூகமளித்த 1200 பேரையும் வரவேற்றனர். நாலு பக்கத்திலிருந்தும் இளம் தம்பதிகள் சுபசோபனங்களையும் வாழ்த்துக்களையும் பெற்ற காட்சிகள் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது.

அரண்மனைக்கு வெளியே கொட்டும் மழையையும் லட்சியம்செய்யாது பிரஜைகள் வேற்றுநாட்டு மன்னர்கள், ஒருவரின் ஒருவராக வந்திறங்குவதைப் பார்த்து நின்றனர்

யுத்தம் ஆரம்பித்ததன் பின் இதுவே அரண்மனையின் மிக ஆடம்பரமான விருந்தாகக் கருதப்படுகிறது.

இளவரசி இன்று மாலை செயின்ட் ஜேம்ஸ் மாளிகையில் உலகின் பல பாகங்களில் இருந்தும் வந்து குவிந்திருக்கும் விலை மதிக்கவொண்ணாதகலையாணப் பரிசுக்குவியலை வருந்தினருக்குக் காட்டினார் அவருடன் லெப்டினன்ட் மவுண்ட் பேட்டனும் இருந்தார்.

நேற்றிரவு மன்னர்பிரானாலும் ராணிபாலும் ஒரு நடனக்கச்சேரிவேற்று நாட்டு மன்னர்களுக்காக நடத்தப்பட்டது. இளவரசி விடியற்காலை வரை நடனமாடிக்கொண்டிருந்தார்.

இளவரசி கல்யாணச்சின்போது எவ்வித சங்கீதம் இருக்க வேண்டும் என்பதை மிகுந்த சிரத்தையுடன் கவனித்து வருகிறார்.

எலிஸபெத் இளவரசியின் பால்ய கால சிநேகிதையான லேடி மேரி கேம்பிரிட்ஜ் நாளை அவர் மணப்பெண்ணாகும் போது அவரது தோழியாக விளங்குவார்.

சீதோஷ்ண நிலை நிபுணர்கள் கல்யாணத்துக்கு 48மணி நேரம் இருக்கும்போது அடுத்த 24 மணி நேரமும் மப்பாகவும் குளிரோடு பனி மழை பெய்வதாகவும் இருக்குமெனக் கணக்கிட்டுக் கூறினர்.

நாளை கல்யாணத்தின் பின்னர் இளவரசி எலிஸபெத் லெப்டினென்ட் மவுண்ட் பேட்டன் ஆகியோரின் செலவுகளை சிறிது காலத்துக்குத் தாமே பார்த்துக்கொள்வதாக மன்னர் பிரான் பாராளுமன்றத்திற்கு ஒரு செய்தி கூறியுள்ளார். யுத்த காலத்தில் அவர் தமது அரசாங்க அலவன்ஸ்ல இருந்து செய்து வைத்த சேமிப்பில் இருந்தே இச் செலவுக்கு அவர் பணம் எடுப்பார்.

பெரியபொருளாகார நெருக்கடியில் பிரஜைகள் சிக்கியிருக்கும்போது ஜனங்கள் மீது இச் சுமையைச் சுமத்தக் கூடாது என்பதே தமது அபிப்பிராயம் என அவர் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக காமன்ஸ் சபையில் ஆலோசிக்கப்படவிருக்கிறது

கண்டி 'ரோஸ் கொட்டேஜ்' கொலைச் சம்பவம்

வேலைக்காரனின் சாட்சியம்

கண்டி, நவ, 18

கண்டியில் 'ரோஸ் கொட்டேஜ்' என்னும் வீட்டில் மாஜி தோட்டக்காரரான சிவதோரிஸ் என்பவர் அவ்வீட்டில் மிஸ் மேபுளோரன்ஸ் பெவின் என்பவரைக் கழுத்தை நெரித்துக் கொலை செய்ததாகவும் ரூ 2000ற்கு மேற்பட்ட மதிப்புள்ள பொருள்களைத் திருடியதாகவும் குற்றம் சாட்டி அக்டோபர் 6-ம் தேதி முதல் ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார் இவரை நேற்று கண்டி மாஜிஸ்டிரேட் திரு டி. எப். வி. ராபர்ட்ஸ் முன் ஆஜர் செய்தனர்.

இவ்வழக்கில் 'ரோஸ் கொட்டேஜ்' எனனும் வீட்டில் வேலை செய்யும் 50 வயதான பி வெண்டரிக் அப்பு சாட்சியமளிக்கையில் தானும் எதிரியும்தான் மற்ற வேலைக்காரர்கள் தத்தம் வீட்டுக்குச் சென்றபின்னும் அங்கு தங்கியிருப்பதாகவும் அக்டோபர் 4-ம் தேதி இரவுகாலஞ் சென்றவருக்கு அவரது சகோதரிக்கும் தான் உணவு பரிமாறவிட்டு இருந்ததாகவும் அன்றிரவு சுமார் 7-30 மணிக்கு அவ்வீட்டில் தாங்கள்தான் இருந்ததாகவும் கூறினர். தொடர்ந்து பேசுகையில் எதிரி தம்முடன் இரவு சுமார் 9-30 மணிவரையும் இருந்ததாகவும் அதன்பின் வழக்கம்போல வராந்தைக்குப் படுக்கச்சென்றுரென்றும் தான் வழக்கம்போல தன்னுடைய இடத்தில் படுத்ததாகவும் மறுநாட் காலை வழமைபோன்று சுமார் 5-30 மணிக்கு தாம் எழுந்து வீட்டின் கதவுகளைத் திறந்ததாகவும் அப்போதும் எதிரி துயின்றுகொண்டிருந்ததால் தாம் அவரை எழுப்பிவிட்டதாகவும் மிஸ் ஹரியட் பெவின் தம்மைக் கூப்பிட்டபோது தாம் கதவைத் திறந்து உட்சென்றதாகவும் மிஸ் ஹரியட் நிற்க மாட்டாது கீழே விழுந்தபொழுது வாயினால் இரத்தம் வந்ததைத் தாம் கண்டதாகவும் இரவு திருடர் வந்து இருவரையும் கழுத்தை நெரித்துவிட்டு பொருள்களைக் கொள்ளையடித்ததாகவும் மிஸ் மேபெவினைப் பார்க்கும்படி அவர் தம்மிடம் கூறியதன்மேல் தான் அங்கு போய் பார்த்தபோது மிஸ் மேபெவின் இறந்து கிடந்ததையும் அவரது கைகள் கட்டப்பட்டிருந்ததையும் தாம் கண்டு உடனே செய்தியை திரு ஜே. எல். டி. சில்வாவுக்கு தெரிவித்ததாகவும் எதிரியின் கைவிரலில் இருந்த காயத்தை தாம் கவனிக்கவில்லையென்றும் எதிரி விவாகம் செய்துகொள்ளப்போவதாக தமக்கு முன் சொல்லவில்லையென்றும கூறினர்.

இதன்பின் திரு சார்ல்ஸ் ஏ டி. சில்வா (வழக்கறிஞர்) சாட்சியமளித்தார். அக்டோபர் 5-ந் தேதி காலை சுமார் 6-30 மணிக்கு தாம் சம்பவத்தைக் கேள்வியுற்று அங்கு சென்றதாகவும் எதிரியை அங்கு கண்டு கேள்விகள் கேட்டதாகவும் கூறினர். தொடர்ந்து விசாரணை ஒத்தவைக்கப்பட்டது.

பர்மா பிரதம மந்திரி டில்லி பயணம்

பண்டித நேருவை சந்தித்துப் பேசுவார்

இந்தியா-பர்மா உடன்படிக்கை

ரங்கூன், நவ. 19

பர்மா பிரதம மந்திரி தக்கினு வும அந்நியநாட்டு மந்திரி ஊ ஆன் டுடும் டிசம்பர் முதல் தேதி புதுடில்லிக்குப் பயணமாவார்கள். அவர்களுடன் பர்மா சர்க்கார் கட்சியான ஃபாசிஸ எதிர்ப்பு சுதந்திர லீகன் காரியதரிசி உ பாலவேயும் செல்வார். அவர்கள் இந்தியா பிரதம மந்திரி பண்டித நேருவையும் மற்றுமுள்ள இந்திய தலைவர்களையும் சந்தித்துப்பேசுவார்கள். இந்தியா-பர்மா உடன்படிக்கை சம்பந்தமாக கொள்கைகளை வகுப்பதுபற்றி முக்கியமான பிரச்னை குறித்து கலந்து பேசுவார்கள் என்று தெரிகிறது.

ஜப்பானுக்குச் செல்லும் வாத்தகப் பிரதி நிதி

கொழும்பு, நவ. 19

சிங்கள வர்த்தக சபை கூட்டுக் காரியதரிசிகளில் ஒருவரும் மெஸர்ஸ் ஹென்டரிக் அல்சன் லிமிடெட்டின் டைரக்டருமான திரு டபிள்யூ. எச் புத்ததாஸ என்பவரை ஸ்தல வர்த்தகர்கள் சார்பாக ஜப்பானுக்கு அனுப்புவதற்கு சர்க்கார் தொந்தெடுத்துள்ளனர் திரும்பி வரும் வழியில் இவர் ஆஸ்திரேலியாவுக்கும் செல்வார் என்று தெரிகிறது.

புது தீர்மானங்களை வருங்காலத்தில் செய்ய வேண்டும்

பிரியாவிடைக் கூட்டத்தில் பேச்சு

மட்டக்களப்பு, நவ 19

மட்டக்களப்பு மெதடிஸ்ட் தேவாலயம் இருக்கும் இடத்தில் சங் ஜி ஈ ஜோஸப் அவர்களுக்கு ஒரு பிரியாவிடைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சங் ஜோஸப் பேசுகையில் வருங்காலத்தில் புதுப்புது கொள்கைகளுக்கேற்ப திட்டங்களும் தீர்மானங்களும்புதுப்பிக்கப்படவேண்டுமென்றும வாழ்க்கையில் கறிளதவ மக்கள் தங்களது மதக்கோட்பாடுகளை அனுசரிக்கவேண்டுமென்றும கூறினர்.

ஸ்ரீமதி. எஸ். வி ஓ. சோபநாதர் பேசுகையில் திரு ஜோஸப் அவர்களையும் ஸ்ரீமதி ஜோஸப் அவர்களையும் பாராட்டிப் பேசினர். மேலும் திரு ஜோஸப் அவர்களுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ள சங. ஜேம்ஸ் எஸ மேதர் அவர்களையும ஸ்ரீமதி மேதர் அவர்களையும் இவர் வரவேற்றார்; இக்கூட்டத்தில் பலர் பேசினர்.

இலங்கையின் விடுதலைப் பாதை

ஆலோசனை மகாநாடு நாளை நடக்கும்

கமியூனிஸ்ட் கட்சி முயற்சி

கொழும்பு, நவ. 19

இலங்கைக் கமியூனிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் எஸ ஏ விக்கிரமசிங்கா, காரியதரிசி பீட்டர்கெனமன் ஆகியோரின் கையொப்பமிட்டு பாராளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர்கள், ஸ்தாபனங்கள் ஆகியவற்றுக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அதில் நாளை மாலை கொட்டாஞ்சேனை 85-ம் நம்பர் கட்டடத்தில் ஓர் எதிர்க்கட்சி மகாநாடு கூட்டுவதாகவும் அதற்கு பிரதிநிதிகள் அனுப்புமாறும் வேண்டப்பட்டுள்ளது.

இம் மகாநாட்டில் இலங்கை சுதந்திர மசோதாபற்றியும், வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு, அரசாங்க அதிகாரிகள் சம்பந்தமான மூன்று ஒப்பந்தங்களும் ஆராயப்படும் என்று தெரிகிறது.

இம் மகாநாட்டின் நோக்கம் இலங்கைக்கு உண்மை விடுதலையை காட்டுவதாகும்.

மோட்டார்கார்- மோட்டர் சைக்கிள் விபத்து

இருவருக்கு காயம்

கொழும்பு, நவ. 19

ரோஸமிட் பிளேஸ-மக்காத்தி ரோட சந்தியில் நேற்றுபிற்பகல் நடைபெற்ற மோட்டார்-மோட்டர் சைக்கிள் விபத்தில் திருஜே ஹரட் திரு எஸ. செல்வாத்தனு ஆகிய இருவரும் காயமடைந்தனர். திரு செல்வரத்தினு ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் இவர்கள் இருவரும் வந்த மோட்டார் சைக்கிள் கே. ஏ வி பெரேரா என்பவரால் செலுத்தி வரப்பட்ட மோட்டார் காருடன் மோதுண்டதாக கூறப்படுகிறது.

கள்ளமாக அரிசி கடத்தியவருக்கு அபராதம்

திரிகோணமலை, நவ. 19

சட்ட விரோதமாக 16 கொத்து அரிசியைக் கடத்திச் சென்றதாக பி ஜி பாலிஸ அப்பு என்பவர் மீது குற்றப்சாட்டித தொடரப்பட்ட வழக்கு திரிகோணமலை மாஜிஸ்டிரேட் முன் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டு முடிவுற மாஜிஸ்டிரேட் எதிரிக்கு ரூ. 25 அபராதம் விதித்தார்.

மலேயாவிலுள்ள இந்திய சர்க்கார் பிரதிநிதி கொழும்பு விஜயம்

இலங்கையின் தொழிலாளர் பிரச்னைகளை அறிய ஆவல்

இலங்கை-இந்திய ஒற்றுமையில் நம்பிக்கை

கொழும்பு, நவ 19

மலேயாவிலுள்ள இந்திய சர்க்கார் பிரதிநிதி திரு ஜே. வி. வி டில்லியில் நடைபெற்ற ஆசிய தொழிலாளர் மகாநாட்டுக்கு விஜயம் செய்து விட்டு சென்னையில் வந்து சில தினங்கள் தங்கியிருந்து நேற்று காலை சிங்கப்பூருக்கு திரும்பிச் செல்லும் மார்க்கத்தில் கொழும்பு வந்திறங்கினர் அவரை தலைமையிலுள்ள இந்திய சர்க்கார் பிரதிநிதி திரு வி. வி. கிரி, இலங்கையிலுள்ள இந்திய சர்க்கார் ஏஜண்டு திரு ஆர். டி. சாரி இலங்கையிலுள்ள இந்தியவர்த்தக கமிஷனர் திரு ஆர். கே. ஹண்டர் முதலியோர் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

திரு தி வி இலங்கையில் 4 தினங்கள் தங்கியிருப்பார். அவர் இங்குள்ள இலங்கைத்தலைவர்களையும் இந்தியத் தலைவர்களையும் சந்தித்துப் பேசுவார். இலங்கையிலுள்ள தொழிலாளர் பிரச்னைகளைப்பற்றியும் அறிந்து கொள்வார்.

அவரைப் பேட்டி கண்டபிருபரிடம் திரு திவி தெரிவித்தாவது:- இலங்கை சுதந்திர மடையவிருப்பதுபற்றி மகிழ்ச்சியுறுகிறேன். ஆசியாவிலுள்ள பல பிரதேசங்களும் சுதந்திர மடையின் அவைகளுக்குள்ளே மிகுந்த ஐக்கியம் ஏற்படும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள பிரச்னைகள் சுலபமாகத் தீர்ந்து விடுமென்றும், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மிகுந்த நேசபான்மை ஏற்படுமென்றும் மலேயாவிலுள்ள முற்போக்கு வாதிகளனைவரும் கருதுகிறார்கள். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நேசபபான்மையும் ஒற்றுமையும் ஏற்படுவதை மலேயாவிலுள்ளவர்கள் மிகுந்த அக்கறையுடன் கவனித்து வருகிறார்கள்

வெளிநாடு சென்றுள்ள இந்தியர்களின் அந்தஸ்து உயர வேண்டுமென்பதே இந்திய சர்க்கார் எண்ணம். அதனாலேயே அவர்கள் இந்தியாவிலிருந்து அயல் நாடுகளுக்கு தொழிலாளர்கள் வெளியேறுவதை அறவே தடுத்துவிட்டார்கள். வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள இந்தியர்கள் அ குள்ள ஜனங்களுடன் ஐக்கியமாக வாழ்வதுடன், அந்நாடுகளில் குடியேறும் இந்தியர்கள் அந்நாடுகளுக்கு விசுவாசமுள்ள அந்நியநாடுகளின் பிரஜைகளாகவே வாழவேண்டும்.

மலேயாவில் இலங்கையர் நல்ல செல்வாக்கான உத்தியோகங்களிலும் தொழிலகளிலுமிருந்து வருகிறார்கள். மலேயா விவகாரங்களிலும் அவர்களுக்கு தக்க செல்வாக்குண்டு. மலேயாவில் இலங்கை வாலிபர்களும் இந்திய வாலிபர்களும் மிகவும் அந்நியோன்யமாக இருக்கிறார்கள். இலங்கையும் இந்தியாவும் ஐக்கியமாக இருக்க வேண்டுமென்று மலேயாவிலுள்ள இலங்கை வாலிபர்கள் விரும்புகிறார்கள். மலேயா இந்திய காங்கிரஸ முதலான இந்திய அரசியல் ஸ்தாபனங்களுடன் மலேயாவிலுள்ள இலங்கையர் ஒத்துழைத்து வருகிறார்கள்.

இந்திய ராணுவசட்டம், விமானப் படைசட்டதிருத்த மசோதாக்கள்

இந்திய பாராளுமன்றக் கூட்டம்

இந்தியா-செக்கோஸ்லவகியா ஸ்தானிக உறவு

புதுடில்லி, நவ 18

இந்திய பாராளுமன்ற இன்று மீண்டும் கூடியது பல மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்திய இராணுவச் சட்டம் இந்திய விமானபபடைச் சட்டம் ஆகியவைகளின் திருத்த மசோதாக்களை பொறுக்குக்கமிட்டி ஆலோசனைக்கு விடத தீர்மானிக்கபபட்டது சில தொழில்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் குறைந்தபட்ச சம்பள நிர்ணய மசோதாவும் நிறைவேற்றப்பட்டது ஜக்கிய தேச சாசனத்தின் சில விதிகளை அமுல் நடத்தவது சம்பந்தமாக பண்டித நேரு பிரரேரித்த ஒரு மசோதாவும் நிறைவேற்றபபட்டது ஐக்கிய தேச பாதுகாப்பு சபை பிறபிக்கும் உத்தரவுகளை அமுல் நடத்துவதற்கு வசதியளிப்பதே இந்த மசோதாவின் நோக்கமாகும்.

இந்திய தொழிற்சங்க சட்டத்திருத்த மசோதா மீது பல திருத்தங்களை திரு கே. சந்தானம் பிரரேபித்தார். இது சம்பந்தமாக விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் கூட்டம் நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

காஷ்மீர்

புதுடில்லி, நவ. 18

ஊரிக்கு மேற்கே இந்தியத் துருப்புகள் கண்காணிப்பு நடவடிக்கை எடுத்து வருகின்றன. படையெடுத்து வந்த எதிரிகளால் சூழப்பட்ட பூஞ்ச், கொடலி, மிர்பூர் ஆகிய இடங்களிலுள்ள காஷ்மீர் இராணுவ ஸ்தலங்களிலிருக்கும் காஷ்மீர் துருப்புகளுக்கு இந்திய விமானபடையினர் விமானங்களிலிருந்து உணவுப் பொருட்களையும் ஆயுதங்களையும் விநியோகம செய்தனர்.

எதிரிகளின் அட்டூழியம்

ஸ்ரீநகர், நவ 18

குல்மர்க் நகரை இந்தியத் துருப்புகள் மீட்பதற்கு முன் எதிரிகள்வசமிருந்தபோது அங்கிருந்த ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தைச் சேதப்படுத்தினர் நல்மர்க் ஐரோப்பியரின் சுகவாசஸ்தலமாகும். இது ஸ்ரீநகருக்கு மேற்கே 30 மைல தூரத்திலிருக்கிறது. ஸ்ரீநகரிலிருந்து 8 ஐரோப்பியர்கள் வெளியேறிச் சென்றனர். ஸ்ரீநகருக்கு வடமேற்கே 30-வது மைலிலுள்ள பாண்டிபுரியில் ஆசிபன் கிறிஸ்தவ மிஷனை சேர்ந்த 30 காஷ்மீரிகளும் வெளியேறினர். பாண்டிபுரியில் பட்டாணிய மலைஜாதியார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து 17 பேர்களைக் கொன்றனர்.

பெஜவாடாவில் போலிஸ் சோதனை

பெஜவாடா, நவ. 18

ஹைதராபாத சமஸ்தானத்தின் எல்லையிலுள்ள சென்னை மாகாணத்தின் பெஜவாடா நகரம் தலைநகரான பெஜவாடாவில் ராணுவப் போலிசார் முஸ்லிம் வீடுகளைப் பரிசோதனை செய்தனர்.

இந்தியா-செக்கோ உறவு

புதுடில்லி நவ. 18

இந்தியாவும் செகோஸ்லவகியாவும், நேசப்பான்மையைப் பலப்படுத்த ஸ்தானிகர் உறவு ஏற்படுத்திக்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றன.

ரயில் விபத்து

கல்கத்தா, நவ 18

இங்கிருந்து 143 மைல் தூரத்திலுள்ள இஷுர்தி ரயில்வே ஸ்டேஷனில் இரு ரயில்கள் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் 6 பேர்கள் மாண்டனர். 21 பேர்கள காயமடைந்தனர்.

ரப்பர் போர்டு கூட்டம்

பங்களூர், நவ 18

திரு ஏ. வி தாமஸ் தலைமையில் இந்தியா ரப்பர் போர்டின் இரண்டாவது கூட்டம் நடைபெற்றது. இந்திய சர்க்கார் கைத்தொழில் இலாகா காரியதரிசி திரு பி. பாயும், இந்திய சர்க்கார் பிரதிநிதி திரு கே கே செட்டூர் உட்பட எல்லா அங்கத்தினரும் விஜயம் செய்திருந்தார்கள். இந்திய ரப்பர் உறபத்தி, விநியோகம், விற்பனை, ரப்பர் சாமான்களின் உற்பத்தி முதலியவை சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள ஆலோசனை செய்யும் பொருட்டு ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டது நிதிக் கமிட்டியும் விலைநிர்ணயக் கமிட்டியும் கூடி ஆலோசனை நடத்தின.

கருவாடு திருடினர்

கொழும்பு, நவ. 19

கொழும்பு புறக்கோட்டையில் 5—ம் குறுக்குத் தெருவில் திரு எஸ ஐ பெர்னான்டோ என்பவருடைய கடையில் புகுந்து ரூபாய் 420 மதிப்புள்ள கருவாட்டைத் திருடியதாக எஸ பி மார்ட்டின் வீ ஏபேர்ட் என்னும் இருவர்மீது குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு தற்காலிக பிரதம மாஜிஸ்டிரேட் திரு வி டி பண்டித குணவர்தனு முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர் நீதிபதி தண்டனை விதிப்பதை 22 ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

புதிய அட்வகேட்

திரு நானயக்காரா சத்தியப் பிரமாணம் செய்தார்

கொழும்பு' நவ. 19

மாத்தளை தொகுதி பாராளுமன்ற அங்கத்தினரான திரு வி டி. நானயக்காரா நேற்று நீதிபதி திரு ஜெயத்திலகா, நீதிபதி திரு பஸநாயகா ஆகியோர் முன்னிலையில் அட்வகேட்டாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் 1931-ம் வருடத்தில் தமது இறுதிப் பரீட்ஷையில்சித்தியடைந்ததும் மாத்தளை விஜயா கல்லூரியில் 16 வருடங்கள் சேவைபுரிந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

வெள்ளவத்தை - பம்பலப்பிட்டி பகுதிகளில் ஒவ்வொரு வீடுகளுக்கும் 'சுதந்திரன்' பத்திரிகை ஆள் மூலம் தினசரி கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்திருக்கிறபடியால் தேவையானோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு மனுச்செய்யவும்

சந்தா பின்வருமாறு:-

1	மாதம்	ரூ. 2-00
3	மாதம்	ரூ. 6-00
6	மாதம்	ரூ. 12-00
12	மாதம்	ரூ. 24-00

மானேஜர்,
'சுதந்திரன்',
194 A, தட்டாரத் தெரு,
கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN"

194 ஏ, தட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411

சர்வஜித்து ஸ்ரீ கார்த்திகை மீ 5 வியாழக்கிழமை

கண்டிச் சிங்களவர்

1815-ம் ஆண்டில் கண்டி

இராஜதானி பிரிட்டிஷார்வசப் சேர்ந்தது. கண்டியர்கள் யுத்தத்தில் சரணாகதியடையவில்லை. ஆனால் அவர்களின் சாதி, சமய, சுதந்திரததைக் கௌரவிப்பதாக பிரிட்டிஷார் ஒப்பந்த மூலம் வாக்களித்ததன் பேரில் தான் சேர்ந்துகொண்டார்கள். 'காரியம் ஆகும்மட்டும் காலைப் பிடி' என்பது பிரிட்டிஷாரின் பிறவிக்குணம். உடன்படிக்கை ஏற்படுத்தி நாட்கள் ஆனதும் கண்டிச் சிங்களவர் அடிமைகள் ஆக்கப்பட்டனர். அவர்களுக்கு போதிய கல்வி வசதி கூட அளிக்கப்படவில்லை. அதுடன் கீழ்ப்பிரதேச சிங்களவரின் அரசியல் ஆதிக்கமும் ஏற்பட்டது நூற்றாண்டுகளாக கண்டி அரசரால் ஆளப்பட்டவர்கள் ஆதிக்கத்துக்கு வந்தால் பின் சொல்லவா வேண்டும் விஷயத்தை?

கண்டியர்கள் தம்மை அந்நியர்கள்போல ஆதிக்கத்திலுள்ளவர்கள் நடத்துவதை விரும்பவில்லை. அரசியல் சீர்திருத்த சம்பந்தமாக வந்த டொனமூர் விசாரணைச் சபையினர் முன் முறையிடார்கள். தனியாட்சி வேண்டினார்கள் தொகையில் குறைந்தவர்களாயினால் தம்மி ம்பியதைப் பெற முடியவில்லை. சமீபத்தில் சோல்பரி விசாரணைச் சபையினர் வந்தார்கள். அவர்கள் முன்பும் சாட்சியம் கொடுத்தார்கள். 1831-ம் ஆண்டில் வந்த ராயல் கமிஷனர்களும், 1929-ல் வந்த டொனமூர் விசாரணைச் சபையினரும் தமக்கு நீதி வழங்கவில்லையென்று ஓலமிட்டார்கள். சோல்பரிச் சபையினரை கண்டியர்கள் சமூக, பொருளாதாரத் துறைகளில் முன்னேற்றவில்லை என்று தமதறிக்கையில் கூறினார்களேயல்லாமல் வேறு ஒன்றும் செய்கிலர்

மீண்டும் மீண்டும் பிரிட்டிஷார் தம்மை அடிமைப்படுத்துவதை கண்டியர்கள் விரும்பவில்லை. மேலும் பிரிட்டிஷாரின் 'சுதந்திர விஞ்ஞாபனம்' வெளிவந்ததும் அவர்கள் தங்களுக்கு என்ன கதி எதிர்காலத்தில் நேரிடுமென்பதை உணர்ந்துவிட்டார்கள். ஆகவே 1815-ம் ஆண்டு மார்ச்சு மாத இரண்டாம் தேதி ஒப்பந்தத்தைக் கௌரவிக்கும்படி கேட்டுள்ளார்கள் தங்கள் பிரதேசத்தை ஒரு தனியாட்சி நாடாக்கி, மத்தியிலுள்ள கூட்டரசாங்கத்துடன் இணைத்து விடும்படியும் ஒரு மகஜரை சென்ற வாரம் கவர்னர் மூலம் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள்.

கண்டியர்கள் தங்கள் மகஜரில் இப்படி கேட்பதற்கு தக்க காரணமும் காட்டியிருக்கிறார்கள் '1815-ம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு மாறாகவே சோல்பரித் திட்டம் எங்கள்மீது புகுத்தப்பட்டிருக்கிறது. இந்த அரசியல் திட்டம் கண்டியர்களின் உரிமைகளுக்கு அடியோடு பங்கம் உண்டாக்குகிறது. கண்டித் தேசிய செல்வம் கண்டியர்களின் அழிவிற்கே உபயோகிக்கப்படுகின்றது; கண்டியரல்லாதாரின் அபிவிருத்திக்கே உபயோகப்படுத்தவும் படுகின்றது

எங்கள் கல்வி வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுகின்றது' எனபதே அவர்கள் கூறும் பிரதான காரணமாகும்.

இம்மகஜரில் உள்ள கோரிக்கையை பிரிட்டிஷார் நிராகரிக்க முடியாது. பிரிட்டிஷார் முன் கொடுத்த வாக்குறுதியை கௌரவிக்கவேண்டும். ஒரு மக்களை அடிமைப்படுத்தும் மற்றோர் மக்கள், சுதந்திரமாக வாழ முடியாது. இலங்கைக்கு உண்மையில் சுதந்திரம் வழங்கும் எண்ணம் பிரிட்டிஷாருக்கு இருக்குமேயென்றால் சிறுபான்மையராகிய கண்டியர்களையும், தமிழரையும், ஒரு சில சிங்கள அரசியல் வகுப்புவாதக் குழுவினரிடம் தஞ்சம் அடையச் செய்வது தகாது. இந்நாட்டை விட்டு விலகும் நேரத்திலாவது சிறுபான்மை மக்களின் அச்சத்தை அகற்றவேண்டும் பிரிட்டிஷ் அரசாங்கம் இதை உணரவேண்டும்.

மூன்று ஐரோப்பிய தேசங்களில் வேலை நிறுத்தம்

பிரான்சில் மிக மும்முரமாய் இருக்கிறது

பாரிஸ், நவ 18

பிரான்சின் வடபகுதி தெற்கும் தென் பகுதி ஈறாக நடக்கும் தொழிலாளர் வேலை நிறுத்தம் இன்று மேலும் பலமடைந்தது மொத்தம் 1 லட்சத்து 20 ஆயிரம் பேர் இப்போது வேலை நிறுத்தம் செய்கின்றனர். மாசெயில்ஸ் வேலை நிறுத்தகாரர்களுள்ளவர் எண்ணிக்கை 75 ஆயிரமாகும். வேலை நிறுத்தம் காரணமாக மாலை நேரக்கடி ஏற்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

மார்செயில்ஸில் ஆயுதந்தாங்கிய விசேஷ காவலர்கள் மேலும் நுவிந்தவண்ணமே இருக்கின்றனர்.

புதிய அரசாங்க முயற்சி

1940ல் பிரதமராய் விளங்கிய பால் ரெய்னுட் புதிய அரசாங்கம் நிறுவுவது சம்பந்தமாக இதர கட்சித் தலைவர்களைக் கண்டு முயன்று வருகிறார் என அறியப்படுகிறது.

இத்தாலி வேலை நிறுத்தம்

இங்குள்ள கொறோட்டோ என்னும் இடத்தில் விவசாயத் தொழிலாளர் பலர் வேலை நிறுத்தம் செய்து விட்டார்கள் அவர்கள் போலிசாரை முற்றுகையிட்டு விட்டனர். இதனால் இதர நகரங்களில் இருந்து போலிசார் கொண்டு வரப்பட்டனர். சில ஆகாய வெடிகளைத் தீர்த்து வேலை நிறுத்தக்காரர்கள் அப்புறப்படுத்தப்பட்டார்கள். இப்போது கொறோட்டோவுக்கு தபால், தந்தி, ரயில் முதலிய போக்குவரத்து களெல்லாம் துண்டிக்கப்பட்டு விட்டது.

பிரிட்டிஷ் வேலை நிறுத்தம்

பிரிட்டனில் நடந்து வருகிறவோய் ஹோட்டல் வேலை நிறுத்தம் சம்பந்தமாக 22 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் அவர்களில் ஒருவர் பாராளுமன்றத்தில் தொழிற் கட்சி அங்கத்தினராய் விளங்குபவர். நேற்றிரவு ஒரு கலவரம் நடைபெற்றதாகவும் அதன் பின்பே குறித்த கைதுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது

இந்த வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக மார்கெட்டுளில் உள்ள இறைச்சிக் கடைத் தொழிலாளர்கள் தினசரி ஒரு மணி நேரம் வேலை அனுகாப வேலை நிறுத்தம் புரிந்து வருகின்றனர்

(ராய்ட்டர்

ராஜாஜியை சென்னை மந்திரிகள் சந்தித்தனர்

புதுடில்லி, நவ 17

இன்று காலை கவர்னர்-ஜெனரல் மந்திரி ஸ்ரீ பக்தவத்சலத்தை வரவேற்றார்

அரசியல் நிர்ணயசபை ஆரம்பக் கூட்டத்தில் கலந்துகொண்டார் ஸ்ரீ பி ஜி கேரும, ஸ்ரீ எஸ் கே சின்ஹாவும் கவர்னர் ஜெனரலுடன் சிற்றுண்டி உண்டனர்.

பீகார் கவர்னர் வந்துள்ளார் நேற்று மாலை ஸ்ரீமான்கள் பி கோபாலரெட்டி, கே மாதவ மேனன், ராகவ மேனன் ஆகியோரை கவர்னர் ஜெனரல் வரவேற்றார்.

ஸ்ரீ கே எம். முன்ஷி ராஜாஜியுடன் விருந்துண்டார்.

"உங்கள் உபதேசங்கள் உலகிலே வேரூன்றி விட்டன"

அஹிம்ஸா தர்மத்தின் மூலம் அவனியில் அமைதியை நிலைநாட்டும் அவதார புருஷர் தாங்களே!

உய்யும் வழி தேடுவதில் மனித வர்க்கம் உங்களையே நம்பிக்கொண்டிருக்கிறது

மகாத்மா காந்திக்கு இரு அமெரிக்க நண்பர்களின் கடிதங்கள்

ஆமதாபாத், நவ 18

மகாத்மா காந்தி 'ஹரிஜன்" பத்திரிகையின் இன்றைய இதழில் "இரண்டு அமெரிக்க நண்பர்களின் ஆரதல் மொழிகள்" என்ற தலைப்பின் கீழ் பின்வருமாறு எழுதுகிறார்:

"அமெரிக்க நண்பர்கள் பலரிடமிருந்து எனக்கு கடிதங்கள் வருகின்றன. அவர்கள் யாரென எனக்குத் தெரியாது. இந்த நண்பர்களில் இரண்டுபேர் எழுதிய கடிதங்களின் சில பகுதிகளை இங்கு வெளியிடுவதில் பலன் உண்டு. அப்பகுதிகளாவன:-

"உங்கள் தேசத்தில் ஏற்பட்டிருக்கும் வருந்தத்தக்க நிலைமை பற்றி நீங்கள் பெரிதும் மனவேதனை அடைந்திருக்கிறீர்கள். எனவே இந்த சம்பவங்கள் பற்றி நீங்கள் ஆழ்ந்து சிந்திக்துக் கொண்டிருக்கிறீர்கள் நீங்கள் மனவேதனை அடைந்திருப்பதால் நான் குறுக்கிட்டு, உங்களுடைய அழகான வார்த்தைகள் உலகத்தில் எல்லா இடங்களிலும் வேரூன்றி விட்டன என்று உங்களுக்கு ஞாபகமூட்ட வேண்டியது அவசியமாகின்றது".

"இந்த வருந்தத் தக்க சம்பவங்களினால் நீங்கள் ஓரளவுக்கு ஏமாற்ற உணர்ச்சி அடைவது இயல்பு. ஆனால் இந்த ஏமாற்ற உணர்ச்சியால் நீங்கள் அதைரியமடைந்து விடக்கூடாது என்பதற்காகவே நான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

"உலகத்திலுள்ள எல்லா தேசங்களிலுமுள்ள எல்லா இனத்தவரும், ஜாதியினரும், எல்லா மதத்தைச் சார்ந்தவர்களும் உலகத்தில் சமாதானம் நிலவ வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கின்றனர் இவர்களைப்பற்றி நீங்கள் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஜனங்களின் நம்பிக்கையைப்பற்றி நீங்கள் அழகாக எடுத்துரைத்திருக்கிறீர்கள், சமாதானத்தை நிலைநாட்டுவதில் உங்களுக்குக் கிடைத்த வெற்றியிலிருந்து இந்த ஜனங்கள் தைரியம் பெற்றிருக்கின்றனர் நீங்கள் உங்கள் மகத்தான வேலைகளை தொடர்ந்து நடத்துதற்கு கடவுள் உங்களுக்கு நீண்ட ஆயுளைத் தரவேண்டுமென்று இவர்கள் என்னுடன்சேர்ந்து பிரார்த்திக்கவேண்டும், நீங்கள் இன்னும் எவ்வளவோ காரியங்கள் செய்தாகவேண்டியதிருக்கிறது".

இவர்கள் கூறுவது உண்மையாக விருக்கலாம் இந்தியாவில் இப்போது ஏற்பட்டிருக்கும் ரணகளரி. அதன் ஆரம்ப உத்வேகம் ஓரளவாறு குறைந்து விட்ட போதிலும் சரித்திரத்தின் போக்கினபடி அசாதாரணமானதல்ல என்றிநக்லாம். ஆனால் இந்தியாவில் நடப்பதை ஒரு அசாதாரண சம்பவம் என்றே கருதவேண்டும்.

இந்தியாவுக்கு இப்போது கிடைத்திருக்கும் சுதந்திரம் அஹிம்சா முறையில் நடத்திய போராட்டத்தால் கிடைத்த சுதந்திரம் என்று நாம் கருதுவோமானால், இந்திய மக்கள் நடத்திய அஹிம்சா போராட்டம் பேரளவுக்கு மாத்திரம் அஹிம்சா போராட்டமாகவே இருந்தது என்று நாமகொள்ள வேண்டும். அது பலவீனமானவர்கள் நடத்திய போராட்டமாகும். இதை நான் அடிக்கடி கூறி வந்திருக்கிறேன். இப்படிச் சொல்வதன் உண்மை இந்தியாவில் இப்போது நடக்கும் சம்பவங்களிலிருந்து நிரூபணமாகின்றது.

விவசாயியை ஏமாற்ற முயற்சி செய்ததாக வழக்கு

மாஜி தபாற்கந்தோர் அதிகாரிமீதுகுற்றச்சாட்டு

கொழும்பு நவ 19

மகாநகர உப தபாற்கந்தோர் ஒன்றில் உதவி தபாற்கந்தோர் அதிகாரியாக கடமை யாற்றிய ஏ. எச். டபிள்யூ டயஸ் என்பவர் தமது கடமையாற்றிய காலத்தில் [கடந்த ஏப்ரல் மாதத்தில்] ரூ 200, ரூ 250 சம்பந்தமாக ஒரு விவசாயியை ஏமாற்றியதாக குற்றம் சாட்டி கொண்டு வரப்பட்ட வழக்கு கொழும்பு தெற்கு கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணை முடிவில் வழக்கு டிஸம்பர் 2-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழிமறித்து கத்தியால் வெட்டி கொலை

எதிரிக்கு மரண தண்டனை

காலி, நவ 18

கடந்த செப்டம்பர் 19-ம் தேதி கே. ஸி. அப்பு என்பவர் மனைவியுடன் வீட்டுக்குத் திரும்பிவரும் வழியில், பல்லகமா என்னுமிடத்தைச் சேர்ந்த டி லாபிரல அப்பு என்பவர் வழிமறித்து கத்தியால் வெட்டிக கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கு தென் மாகாண அசைஸ கோர்ட்டில் பிரதம நீதிபதி ஸர். ஜோன் ஹோவார்ட் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணை முடிவில் நீதிபதி எதிரிக்கு மரண தண்டனை விதித்தார்.

மலேயா மக்களின் ஆத்திரம்

ஆஸ்திரேலியாவின் வெள்ளை நிறத் திமிர் கொள்கை கண்டனம்

வெள்ளைக்காரிகளின் கணவர்களான 14 மலாய்க்காரர்களை வெளியேற்றினால் பழிக்குப்பழி

மெல்போர்ன், நவ. 18

மலேயாவைச் சேர்ந்த மலாய்க்காரர்களான 14 மாலுமிகள் ஆஸ்திரேலியாவில் வெகுகாலம் தங்கியிருந்தபோது அவர்கள் ஆஸ்திரேலியாவிலுள்ள வெள்ளைப் பெண்களைக் காதலித்து அப்பெண்களுடன் குடும்ப வாழ்க்கை நடத்திவருகின்றனர் இதனால் ஆஸ்திரேலியாவில் கலவரம் நிற ஜனநாயகதத்தி ஏற்பட்டுவிடுமென்றும் ஆஸ்திரேலியாவில் வெள்ளையர் கலந்த தவிர வேறு நிறத்தவர் குடியேறக்கூடாது என்ற ஆஸ்திரேலிய சர்ககாரின் கொள்கையின்படியும் ஆஸ்திரேலிய சர்க்கார் இந்த 14 மாலுமிகளையும் ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியேற்றத் தீர்மானித்திருக்கின்றனர். ஆஸ்திரேலியாவில் வெள்ளையரலாதார் குடியேறலாகாதென்ற கொள்கையுடைய ஆஸ்திரேலிய சங்கத்தின் தலைவரான திரு டபிள்யூ ஓ புல்டன் பின்வருமாறு தெரிவித்தார்,-

14 மலாய் மாலுமிகளை வெளியேற்ற ஆஸ்திரேலிய சர்க்கார் தீர்மானித்திருப்பதை எங்களசங்கம்முழுமனதுடன் ஆதரிக்கிறது அது ஆஸ்திரேலியாவின் வெள்ளை வொள்கைக்கு பொருத்தமானதே எந்த ஐப்பானியரும் ஆஸ்திரேலியாவில் குடியேறவோ அல்லது ஆஸ்திரேலியப் பிரஜையாகவோ அனுமதிக்க முடியாதென்று ஆஸ்திரேலிய சர்க்கார் தீர்மானித்திருப்பதையும் எங்கள் சங்கம் வரவேற்கிறது

ஆட்சேபனை

ஆனால் உலக நிறவிரோத சங்கத்தின் சிட்னி நகரிலுள்ள ஆஸ்திரேலிய கிளைச் சங்கத்தார் ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் நிறத்திமிர்கொண்ட இத்தீர்மானத்தைக் கண்டித்து அதை சர்க்கார் திரும்பவும் ஆலோசனை செய்யவேண்டு மென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மலேயாவில் பலமான கண்டனம்

சிங்கப்பூர், நவ. 18

ஆஸ்திரேலியாவில் ஆஸ்திரிய பெண்களைக் கலியாணம் செய்துகொண்டு குடும்ப வாழ்க்கை நடத்தும் 14 மலாய் மாலுமிகளை வெளியேற்ற வேண்டுமென்று ஆஸ்திரேலிய சர்க்கார் செய்துள்ள தீர்மானத்தை மலேயாவிலுள்ள பத்திரிகைகள் பலமாகக் கண்டிக்கின்றன மலேயா ட்ரிப்யூன் பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது:-

ஆஸ்திரேலிய சர்க்கார் நிறத்திமிரான மனப்பான்மையை யும் கைவிடும்வரை ஆஸ்திரேலியர் மலேயாவில் குடியேறுவதைத் தடைசெய்ய வேண்டும்.

ஆசியாவில் ஆசிய மக்களுடன் சேர்ந்து போர் புரிந்த ஆஸ்திரேலிய ராணுவத்தினர் இது விஷயத்தில் தலையிட்டு ஆஸ்திரேலிய சர்க்கார் மனப்பான்மையை மாற்ற முன்வர வேண்டும்.

மலாய் பாஷையில் வெளியாகும் பிரபல பத்திரிகையான 'உதுசன் மலேயா' மலாய் மாலுமிகளை ஆஸ்திரேலிய சர்க்கார் வெளியேற்றுவதைத் தடுப்பதற்கு ஆஸ்திரேலிய தொழிற் சங்கத்தார் முயற்சி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறது.

மலாய் மாலுமிகள் சங்கத்தலைவர் நேற்று மலேயாவிலுள்ள ஆஸ்திரேலிய கமிஷனரைச் சந்தித்து ஆஸ்திரேலிய சர்க்கார் நடவடிக்கையைக் கண்டித்தார்.

யுத்தக் குற்றவாளிகள்

ஹாங்காங், நவ. 18

ஆஸ்திரேலிய ராணுவத்தினரையும் ஆஸ்திரேலியர்களையும் ஹிம்சித்து கொலைபுரிந்த ஜப்பான் யுத்தக் குற்றவாளிகள் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகள் இங்கு விசாரிக்கப்படும்.

(ராய்ட்டர்)

ஜப்பானில் ரகசிய அரசாங்கம்

பாதாள இயக்கம் பரவி வருகிறது

டோக்கியோ, நவ. 18

ஜப்பானில் நேசதேசங்கள் மக் ஆர்தர் தலைமையில் ஆக்கிரமிப்பு ராணுவத்தை நிறுவி ஜப்பானை ஜனநாயக ஆட்சி முறைக்குக் கொண்டுவரச் செய்யப்பட்ட முயற்சிகள் வீணாகும் போலிருக்கிறது அங்கு இப்பொழுது பாதாள இயக்கம் பரவிவருகிறது. ரகசிய அரசாங்கமொன்றும் வேலை செய்துவருகிறது. இவ்விஷயத்தை அறிவித்து மக் ஆர்தர் தலைமைக் காரியாலயம் வெளியிட்ட அறிக்கையை இப்பொழுது ஜப்பான் அரசாங்கத் தலைவர்கள் ஊர்ஜிதம் செய்கிறார்கள்.

இதனால் ஜப்பான் சமாதான உடன்படிக்கை நிறைவேறிய பின்னரும் நேசதேச ஆக்கிரமிப்புப் படைகளை ஜப்பானில் தொடர்ந்து நிறுவவேண்டிய நிலைமை ஏற்படும்போல் தெரிகிறது. (ராய்ட்டர்)

விஞ்ஞானம்பற்றி தமிழ் சொற்பொழிவுகள்

விவேகானந்த கல்லூரியில் ஏற்பாடுகள்

சென்னை, நவ 17

விவேகானந்த கலாசாலையின் ஆதரவில் தற்கால நாகரிகத்திலும் அன்றாட வாழ்விலும் ஈடுபடும் விஞ்ஞானததவங்களைப் பற்றி பொதுமக்கள் சுலபமாக அறியுமாறு தமிழில்சொற்பொழிவுகள் நடத்த கலாசாலை ரசாயன பேராசிரியர் ஏற்பாடு செய்து வருகிறார். அடுத்த வாரம் ஆசிரியர் விஞ்ஞான ரத்ன ஆனந்தவைத்யநாதன் ஆரம்பவிழாப் பிரசங்கம் செய்வார்.

தோட்ட சுப்பரின்டனை வழிமறித்து பணம் கொள்ளை

எதிரிக்கு தலா ரூ. 10,000 பிணை

களுத்துறை, நவ 19

மகாகமவில் குடகங்க எஸ்டேட்டுக்குச் செல்லும் வழியில் நாபொடை லோகன் எஸ்டேட் சுப்பரின்டனை வழிமறித்து ரூ 2,000 கொள்ளையடித்தது சம்பந்தமாக ஏழு பேர்கள் மீது ஏழு குற்றச்சாட்டுகளுடன் ஒரு வழக்கு களுத்துறை மாஜிஸ்டிரேட் முன் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் பி ஜேம்ஸ் கே சாராளஸ், கே லெஸ்டி, ஏ. ஜேம்ஸ், கே மனிதாஸ், ஓ கபிரியேல் முதலியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இதில் எல்லா எதிரிகளும் தலா ரூ 10,000 பிணையில் போகுமாறு விடப்பட்டதுடன்காரின் சொந்தக் காரரான ஏ ஜேம் என்பவர் அவருடைய காரை கோர்ட்டில் தேவைப்படும்போதெல்லாம் ஆஜர் செய்ய வேண்டுமென்று கூறி அரற்கு பிணையாக ரூ 20,000 கொடுக்கவேண்டுமென்றும் நீதிபதி தீர்ப்பளித்தார். இவ்வழக்கில் திரு ஜே. பி பார்துஹாமன் (குரிரின்டண்ட்) சாட்சியமளித்தார் இவ்வழக்கில் 19 சாட்சிகள் இருக்கின்றனர். விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

இந்தியாவில் மேலும் 5 ரேடியோ ஸ்டேஷன்கள்

நாகபுரி, நவ 15

பாட்னா, கட்டாக், ஆமதாபாத், நாகபுரி முதலிய இடங்களில் ரேடியோ நிலையங்கள் அமைக்கும் திட்டமொன்றை இந்தியா சர்க்கார் விளம்பர மந்திரி அங்கீகரித்து விட்டார். அஸ்ஸாம் மாகாண தலை நகரான ஷில்லாங்கிலும் கூடிய சீக்கிரம் ஒரு ரேடியோநிலையம் ஏற்படும்.

இந்தோனேஷியாவில் இன்னும் டச்சுத் தொல்லை தீரவில்லை

யுத்த நிறுத்த உத்தரவு அமுல் சம்பந்தமாக மூவர் கமிஷன் முயற்சிக்கு முட்டுக்கட்டை

இந்தோனேஷிய நிலைபற்றி டாக்டர் கனி அறிக்கை

பட்டேவியா, நவ 18

ஐக்கிய தேச பாதுகாப்பு சபையின் யுத்த நிறுத்த உத்தரவை அமுல் செய்வது சம்பந்தமாக டச்சுகாரருக்கும் இந்தோனேஷியர்களுக்குமிடையேயிருந்த கஷ்டமேற்பட்டிருக்கிறதென்று இந்தோனேஷியப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன விஷயமறிந்தவர்கள் இங்கு இச்செய்தியை ஊர்ஜிதம் செய்கிறார்கள்.

டச்சு - இந்தோனேஷிய தகராறைத் தீர்த்துவைக்க பாதுகாப்பு சபை அனுப்பிவைத்த மூவர் கமிஷனின் முதல் வேலை யுத்த நிறுத்த உத்தரவை அமுல் செய்வதாகும். இது சம்பந்தமாக மூவர் கமிஷன் பட்டேவியாவிலும் ஜோக்ஜகர்த்தாவிலும் டச்சுக்காரர் டியொன்றும் இந்தோனேஷியக் கமிட்டியொன்றும் ஏற்படுத்தி மாறி மாறி இக்கமிட்டிகளுடன் கலந்து பேச ஏற்பாடு செய்திருந்தது.

ஜாவாவிலும் சுமாத்திராவிலும் ராணுவ சூன்ய பிரதேசங்கள் ஏற்படுத்துவதுபற்றியும் ஆலோசித்து வந்தார்கள்

டச்சுக்கமிட்டி, இந்தோனேஷியக்கமிட்டி இவைகள் இரண்டாவது தடவையாகக் கூடியபோது தகராறு ஏற்பட்டது இதனால் கமிஷனின் பெல்ஜிய பிரதிநிதி வான்ஜீலந்து இந்தோனேஷியா செல்லுவதும் ஆஸ்திரேலியா கிர்ப் சுமாத்ரா செல்வதும் தடைப்பட்டது.

வான்ஜீலந்து பெல்ஜியம் திரும்புவார் என்றும் அவருக்குப் பதில் கமிஷனில் தற்காலிகமாக வேறு பெல்ஜியப் பிரதிநிதியமிக்கப்படுவார் என்றும் தெரிகிறது

டச்சு எண்ணம் பலிக்கவில்லை

நியூயார்க், நவ 19

இந்தோனேஷியா குடியரசின் உபதலைவர் டாக்டர். எஸ். கே கனி பத்திரிகை நிருபர்களிடம் பின்வருமாறு தெரிவித்தார்:-

டச்சுக்காரர்கள் தாங்கள் எதிர்பார்த்ததபடி இந்தோனேஷியாவில் பொருளாதார வெற்றியையோ அரசியல் வெற்றியையோ அடையத் தவறிவிட்டார்கள் ஆனால் இந்நாக்கத்துடன் ஏகாதிபத்திய வெறிகொண்டு டச்சுக்காரர் இந்தோனேஷியா மீது யுத்தந் தொடுத்ததால் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டதே கண்டபலன். இந்தோனேஷியா சிறிது பிரதேசங்களை இழந்தன. எங்களுக்கு எவ்வளவோ வசதிக் குறைகளும் நிர்பந்தங்களும் ஏற்பட்ட போதிலும் நாங்கள் போட்ட திட்டததை நிறைவேற்றி வருகிறோம் கூடிய சீக்கிரம் எங்கள் நாட்டுக்கு அந்நிய மூலதனமும் அந்நிய தொழில் நிபுணர்களும் தேவைப்படும்.

டாக்டர் கனி ஹாவனாவில் நடைபெறும் உலக வாணிக மகாநாட்டுக்கு இந்தோனேஷிய பிரதிநிதி கோஷ்டித் தலைவராகச் செல்லும் மார்க்கத்தில் இங்கு வந்தார். அவர் நவம்பர் 11-ம் தேதியன்று டச்சு விமானத்தில் புறப்பட்டு ஹாலந்து வழியாக நியூயார்க் வந்து சேர்ந்தார். ஹாவனா மகாநாடு முடிந்ததும் அவர் அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்வார். (ராய்ட்டர்)

முனிசிபல் சபையின் நகல் வரவு செலவு திட்டம்

அதிக வருமானம் நெருக்கடியை தவிர்க்கிறது

கொழும்பு, நவ 19

கொழும்பு முனிசிபல் சபையின் உத்தேச வருமானச் செலவு நகல் திட்டத்தின்படி 1948-ம் வருடத்துக்கு ரூ 14,318631 வருமானமாகக் கிடைக்குமென்று கூறப்படுகிறது. 1946-ம் வருடத்தில் கிடைக்த வருமானம் ரூ. 9684,592 இப்பொழுது வீட்டுக் குடிக்கூலி வரியை 20 சத விகிதத்திலிருந்து 30 சத விகிதமாக அதிகரித்திருப்பதால் தான் அதிகமான வருமானம் கிடைக்குமென்று கருதப்படுகிறது. இச்செலவு திட்டத்தில் புதிய விசேஷ வேலைகளுக்கும் இடம் வகுக்கப்பட்டிருக்கிறது. சபையின் வருமானம் அதிகரிப்பதினால் நிதி நிலைமையில் நெருக்கடி ஏற்படுவது தடுக்கப்படுமென்று கூறப்படுகிறது. செலவும் இதே தொகையாக இருக்குமென்றும் 1948-ம் வருடத்துக்கு வரவு செலவு இரண்டும் சமமாகவே இருக்குமென்றும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையில் வாக்கெடுக்கும் முறை

பாராளுமன்ற சபாநாயகரிடம் மலையா ஆலோசனை

கொழும்பு, நவ. 19

மலையா யூனியன் ஆலோசனைச் சபை விஜிதர் திரு. எஸ். ஈ. டர்னர் இலங்கைப் பிரதிநிதிகள் சபை சபாநாயகர் திரு. ஏ. எப். மொலமுரேக்கு எழுதிய கடிதத்தில் சபையில் விஷயங்கள் விவாதித்த பின் வாக்கெடுப்பதற்கு கையாளப்படும் முறைகள்பற்றி அறிவிக்கும்படி கேட்டிருந்தார். மலையா யூனியன் ஆலோசனைச் சபை அங்கத்தவரில் ஒருவரான திரு. ஈ. ஈ. துரைராஜாவும் என்பவரின் ஆலோசனையின் பின்னரே தாம் இந்த எழுதிக்கேட்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரதிநிதிகள் சபை விஜிதர் திரு. எஸ். பி. செரனியகல இதற்கான பதிலை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விமானப்படை

அவசரப்பட்டு அமைக்க வேண்டாம்

ஸர். ஜோர்ஜ் பீரியின் ஆலோசனை

கொழும்பு, நவ 19

சமீபத்தில் தென் கிழக்காசிய விமானப் படை தளபதியாக இருந்து விலகிச் செல்லும் ஸர். ஜோர்ஜ் பீரி என்பவர் இலங்கைக்கு விமானப் படை வேண்டுமென்பது கிரியாம்சையில் செய்யக் கூடிய ஒரு திட்டமாகத் தோற்றினும் இப்பொழுது விமான உற்பத்தியில் துரித முன்னேற்றங்கள் ஏற்படுவதால் இலங்கை விமானப் படையை அமைக்கும் விஷயத்தில் அவசரப்படாது முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டுமென்றும் இப்பொழுதுள்ள நிலைமைப்படி விமானப் படை அவசியமில்லையென்றும் கூறினார்,

இப்பொழுது இத்துறையில் திடீர் திடீரென ஏற்பட்டு வரும் மாற்றங்களை வெகு கவனமாக ஆராய்ந்து நிலைமையின் மாற்றங்களுக்கேற்பவே விமானப் படையை இலங்கை அமைக்க வேண்டுமென்றும் செலவு விஷயங்களில் கவனமாக இருக்க வேண்டுமென்றும் அவர் மேலும் கூறினார்.

உடுகம தேர்தல் சம்பவம்

எண்மர் மீது குற்றச் சாட்டு

காலி நவ. 19

உடுகம தேர்தல் தினத்துக்கு முதல் நாள் செப்டம்பர் 17-ம் தேதி திரு. பிள்ளை. என். டி. அல்விஸ், ஹரிதில்லகரதனு விஜயசிங்க சைமன், எம். எச். ஜீரள், எல். என் பிரான்ஸிஸ், எல். என். சிரிசேனா, டபிள்யூ. எச். ஜினேரிஸ், ஏ. எஸ் பெரிக் ஆகியோர் சட்ட விரோதமாக கூட்டங் கூடி ஒரு ஜீமோட்டாரை நாசம் செய்து அதன் டிரைவரை அனுவசியமாக தடை செய்து ரூ. 400 மதிப்புள்ள பொருள்களை களவாடியதாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு காலி மாஜிஸ்டிரேட் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் திரு. சைமன் அபயவிக்கிரமா (பாராளுமன்ற அங்கத்தவர்) பீ. டீ. கலன்சூரியா, டி. பி. ஜி. ஸ்டீபன் அல்விஸ் ஆகியோர் சாட்சியமளித்த பின் மேற்கொண்டு விசாரணை 20-ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

மண்ணெண்ணெய் விளக்கு விழுந்து தீப்பிடித்தது

பெண் மரணம்

கொழும்பு, நவ. 19

கொலன்னாவையிலுள்ள எம். எம். சீலாவதி (வயது 30) என்னும் பெண் மீது மண்ணெண்ணெய் விளக்கு தவறி விழுந்ததால் தீப்பிடித்துப்பலத்த காயங்களுடன் கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டிருந்தார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சில மணிநேரத்தில் அவர் மரணமடைந்தார்.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

'ஊராரின் பணந்தானே! தாராளமாகச் செலவு செய்'

இலங்கை மந்திரிகளின் இகபோக வசதிகள்

ஏழைமக்களைப் பற்றி இனி ஏன் கவலை!

'லங்காதீப' (14-11-47) த்தில் 'ராஜமுராரி' எழுதியதன் தமிழாக்கம்.

'சியலு ஸத்வயோ நி-துக், நி-ரோகி, சுவபத் வேவா' என்று காலையிலும் மாலையிலும் மைத்ரீ (அன்பு) பாராயணம் பண்ணும் எமக்கு யார் மீதுள்ள பொறாமையும்-கோபமும் என்ன? ஒன்றுமேயில்லை. எல்லோரும் இன்புற்றிருக்க வேயன்றி-வேறொன்றறியேன் பராபரமே! சாது-சாது!!

பழைய-புதிய அரசாங்க சபைகள்

பழைய சட்ட சபை அங்கத்தவர்கள் எவ்வித பிரதிபலனையும் எதிர் பாராமல் தேச சேவை செய்தார்கள். ஆனால், டொமினியன் திட்டத்தின் கீழ் அரசாங்க சபை அங்கத்தினர்கள்-மந்திரிகள் சம்பளம் வாங்கினார்கள். தம் விருப்பம்போன்று தேச நிர்வாகத்தில் அதிகாரம் செலுத்தினார்கள். இதற்காகவெல்லாம் நாம் அவர்கள் மீது குற்றம் சாட்டுவது என்ன கையாலாகாத்தனம்? எனினும் இன்றெல்லாம் இந்த சோல்பரி திட்டத்தின் கீழ் மந்திரி சபைக்காக செய்யும் செலவை நினைக்கும்போது, 'மைத்ரீ'யும் மண்ணாகட்டியும் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. வாழ்க்கையில் சுபீட்சமுள்ள எதிர்காலம் எங்களுக்கும் உண்டாகுமா? நாங்கள் எங்கே சென்று கொண்டிருக்கிறோம்!

சகலதையும் கொடுப்போம்

பார்லிமெண்ட்-அங்கத்தினருக்கு மாதம் 600 வீதம் கொடுப்போம். உதவி மந்திரிக்கு பாக்கெட் செலவு 500-ம் சேர்த்து 1,500மாக கொடுப்போம். மந்திரிகளுக்கு ஆயிரம் இரண்டாயிரம் என்று கொடுப்போம். பல லட்சக் கணக்கான மக்கள் கஞ்சிக்கு உபயோகமில்லையென்று பரிதவிக்கும்போது பாலுக்கு சீனியில்லையேயென்று கூப்பாடு போடும், இவர்களுக்கு விருந்துண்பதற்கு இன்னும் ஆயிரக் கணக்காக அள்ளிக் கொடுப்போம். ஏழை மக்கள் குந்திக்கொள்ள இடமின்றி தெருத் திண்ணைகளிலும் மரத்தடிகளிலும் காலம் கடத்தும்போது, பிரதம மந்திரியின் மாளிகையை அலங்கரிப்பதற்கு 2 லட்சமும், பார்லிமெண்ட் தலைவரின் வாசஸ்தலத்தை அலங்கரிப்பதற்கு ஒன்றரை லட்சமும் கொடுப்போம். பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் தங்கும் மாடி வீட்டிற்கு 2 லட்சத்து 75 ஆயிரம் கொடுப்போம். வேறு என்ன? அவர்களின் சுக வாழ்க்கைக்காக தேசத்தையே தாரைவார்த்துக் கொடுப்போம் எவ்வித வேதனையும் முணு முணுப்பின்றி எங்கள் கபினெட் மந்திரிசபை தேசப் பொதுப்பணத்தை இப்படியெல்லாம் பங்கிடுகிறது இதெல்லாம் பருத்திக்கொட்டை- பிலாக்கொட்டையல்ல. தேசிய செல்வமான-பொது மக்களின் பணமான-ரூபாய்களே! இலங்கையுதையல் கிடைக்கும் குபேரநாடல்ல.

மந்திரிப் பிள்ளைகளை தாலாட்டுவதற்கு

இவ்வளவும் போதாதென்று இவர்களின் சுகசௌகரியத்தை முன்னிட்டு "டெனிஸ்" பந்தாட்டமைதானமும் நீந்தி விளையாடுவதற்கு நீர்த்தடாகமும் மற்றும் வசதிகளையும் செய்து கொடுப்பதற்காக பல லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்படும். இப்பொழுதே இவர்களுக்கு முதலாம் வகுப்பு புகை ரத பிரயாணத்திற்கு இலவசச் சீட்டும் கிடைத்திருக்கிறது. இன்னும்-தபால் தந்தி அனுப்புவதெல்லாம் இலவசத்திலேதான். இவையெல்லாவற்றிற்கும் பொதுப்பணம் இருக்கிறதாச்சே. இப்படியாக பார்லிமெண்ட் பிள்ளைகள் கொழும்பு நகரத்தில் தங்கும்போது, அவர்களை தாலாட்டுவதற்கு அதிகப்படியான செலவுகள் செய்யப்படுகின்றன.

திவ்ய புத்திரர்கள்!

எங்கள் பிரதிநிதிகள்-மந்திரிகள் எவ்வளவு சிரேஷ்டமான 'சுகுமார' திவ்ய புத்திரர்கள்? இவர்களுக்கு நாங்கள்-பொது மக்கள்-எமமட்டு?

பொது மக்களின் கடமை

தேர்தல் காலங்களில், உயிரைப் பிடித்துஎமனோடு போராடிக்கொண்டிருக்கிற ஏழைகளின் குடிசைகளில் முதுகெலும்பை "ங"ப்போல் வளைத்து நுழைந்தார்களென்றாலும், குடிசைத்தண்ணீர்களில் கால்மடக்கி உட்கார்ந்து தண்ணீர் கேட்டார்களென்றாலும், மிருதுவான பாதங்களிலே கல்லும் முள்ளும் குத்தப்பாமரமகளை வாழும் படிக்காட்டு அடிப்பாகைகளில் வாக்கு கேட்க அலைந்தார்களென்றாலும், இந்த பார்லிமெண்டுப் பிள்ளைகள் எவ்வளவு சிரேஷ்டமான திவ்ய புதல்வர்கள்? தாமரை மலரின் இதழ் கூட இந்த சுகுமார பாதங்களில் படுவது எவ்வளவு வேதனையாய் இருக்கும்? என்னவே இவர்களை ஹம்ஸ தூளிகாமஞ்சத்தில் அரசசெய்யவேண்டியது பொதுமக்களின் சிரேஷ்டமான கடமையாகும்.

நமக்கு இல்லாவிட்டாலும்.....

ஏழைப் பொதுமக்களுக்கு உணவிலாவிட்டால் காரியமில்லை. உடையில்லாவிட்டால் என்ன? இவர்களுக்கு தெருத் திண்ணைகளும் மரத்தடிகளும் இருக்கும்போது வீடுகள் இல்லாவிட்டால் என்ன? நோய் நொடிக்கு மருந்து. இல்லாவிட்டாலும் காரியமில்லை. ஏழைப் பொதுமக்களுக்கு அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான என்னதான் இல்லாவிட்டாலும், பார்லிமெண்ட் பிள்ளைகளுக்கு எவ்வித குறையுமின்றி வசதிசெய்ய வேண்டியது அவசியமாகும்.

மந்திரிகள் தபசு புரிய போய்விட்டால்?

எங்கள் அரசாங்கக்காரர்கள் பார்லிமெண்டு பிள்ளைகளின் சுகசௌகரியத்தின் மீது எவ்வளவு அக்கறையாய் இருக்கிறார்களென்றால், இவர்கள் தங்கும் வாசஸ்தலமான "ஸிராவஸதி" மாளிகையின் சௌந்தரியத்திற்கு தடையாய் இருக்கும் வீடுகளைக் கூட விலக்குவாங்கி உடைத்துவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறார்கள். இப்படியானால் ஒருசமயம் "ஸிராவஸதி"க்கு அருகே இருக்கும் தெருக்களிலே காவல்காரர்களை நிற்பாட்டவும் செய்வார்கள். எதற்காக? அப்படி செய்யாவிட்டால், கண் குழிவிழுந்து, அழகின்றி ஆடையின்றி எலும்பும் தோலுமாக அலையும் மனிதப் பிராணிகள், இந்த தெருக்களில் அங்குமிங்கும் செல்லக் கூடும். பார்வைக்கு அருவருப்பாய் இருக்கும் இவர்களை பார்லிமெண்ட சுகுமாரர்கள் கண்டுவிட்டால், சம்சார சாகரத்தை வெறுப்புக்கொண்டு இல்வாழ்க்கையைத் துறந்து, துறவுகளாய் தபசு புரிய காட்டிற்கு போய்விட்டால் அப்புறம் எங்களுக்கு பார்லியென்டு எவகே? பொதுமக்களுக்கு உலகமே அஸ்தமித்துவிடும்! ஆனபடியால், அவர்கள் விஷயத்தில் எவ்வளவு செலவு போனாலும் பொதுமக்கள் முணுமுணுக்கக் கூடாது.

புதிய தந்திரம்

பார்லிமெண்ட் பிள்ளைகளை இவ்வளவெல்லாம் தாலாட்டுவது எதற்காக? எதிர்க் கட்சியினரை மனதைக் கவர்ந்து கொள்ளுவதற்கா? விட்டை உடைக்கிற கள்ளர்கள், குரைக்கிற நாய்களுக்கு எலும்புத் துண்டைக் கொடுப்பதாகவும், அச்சமயம் அந்த நாய்கள் வாலை ஆட்டிக்கொண்டு அருகே வருவதாகவும் சொல்லப்படுகிறது இவை எப்படியானாலும் எதிர்க்கட்சியினர் இதற்கெல்லாம் ஏமாந்துவிடமாட்டார்கள் என்று நாம் நினைக்கவில்லை. இதெல்லாம் வருகிற தேர்தலில் பணக்காரர்களையே வருவித்துக் கொள்ளும் உபாயமேயாகும் தேவலோகத்திற்கு இரண்டாவதாகவுள்ள இவ்வளவு சுபோக சௌகரியங்களைக் கண்டு ஆனந்தமடைகிற பணக்காரர்கள் எத்தனை லட்சத்தைச்சரி செலவுசெய்தும். என்னபாடுபட்டும் பார்லிமெண்டுக்குள் நுழைய முயற்சிப்பார்கள் என்பது திண்ணம்.

அந்நியர் சொத்தை பங்கிடும் தயாளம்

இதனால், ஏழைப் பொதுமக்களின் நண்பர்களுக்கு தானாகவே பார்லிமெண்டுக் கதவு மூடப்பட்டிருக்குமென்று சிலர் கூறுகிறார்கள். நாம் அப்படி நினைக்கவில்லை. ஏனென்றால், எவ்வித லாப-லோபமுமின்றி மற்றவர்களுடையவற்றை கொடுக்கும் பெருந் தியாகமே இதுவாகும்,

சாது! சாது!!

ஏழை இலங்கைக்கு என்னவானாலும், ஏழைத் தேசமக்களுக்கு என்னவானாலும், "மைத்ரீ" பாராயணத்தை சிறிது மாற்றி சியலு "மந்திரிவரையோ நி-துக் நி-ரோகி சுவபத கவபெம் கெலித்வா" என்ற பிரார்த்தனைசெய்து எல்லோரும் ஒரே முறையில் சாது-சாது!! போடுவோம்.

(சியலு மந்திரிவரையோ-எல்லா பார்லிமெண்ட் அங்கத்தினர்களும், சுவபத்வ- ஆரோக்கியத்துடன், பெம் கெலித்வா-காதல் சரசம்செய்யட்டும்.)

இலங்கைக்குகைத்தறி ஜவுளி ஏற்றுமதி

ஜனுவரிமீ 31உ வரை லைஸன்ஸ் நீடிப்பு

சென்னை, நவ 17

சென்னை மாகாண கைத்தறி ஜவுளி வர்த்தகர் சங்கத்தின் காரியதரிசி பின்வருமாறு அறிவிக்கிறார்:- 1946-ம் வருஷத்தின் இரண்டாவது பாதிக்கு இலங்கைக்கு கைத்தறி ஜவுளி ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்ட கோட்டா லைஸன்ஸ் 1948 ஜனுவரிமாதம் 31-ம் தேதி வரை செல்லத்தக்கதாகுமென்று பிரதம ஏற்றுமதி கண்ட்ரோலர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார். இவ்வாறு லைஸன்ஸ் நீடிப்பு நாங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே அளிக்கப்பட்டது.

இந்தியாவில் தொழில் நுணுக்க பயிற்சி பள்ளிக்கூடம்

ரோமன் கத்தோலிக்கர் உத்தேசம்

நியூயார்க், நவ. 15

இந்தியர்களுக்குப் பயிற்சியளிக்க இந்தியாவின் கைத்தொழில் திட்டங்களுக்கு உதவுவதற்காக இந்தியாவில் இரண்டு தொழில் நுணுக்கப் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்க ரோமன் கத்தோலிக்க சர்ச்சை சேர்ந்தவர்கள் உத்தேசித்திருப்பதாக தெரிவிக்குவந்துள்ள சென்னை ஆர்ச்பிஷப் மகாபூஜ்யதலாயி மாதிரிஸ் அறிவித்தார். இந்த இரண்டு பள்ளிக்கூடங்களையும் நிறுவ 25,000 டாலர் செலவாகும்.

இந்திய விஞ்ஞான கழக டைரக்டர்

ஸ்ரீ கணபதி அய்யர் நியமனம்

பெங்களூர், நவ 17

மைசூர் சிவில்சர்வீஸைச்சேர்ந்த ஸ்ரீ வி. கணபதி அய்யர் பெங்களூர் இந்திய விஞ்ஞான கழகத்தின் டைரக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் இதுவரை சர்க்காரின் விஞ்ஞான உற்பத்தி ஸ்தாபனத்தின் அதிகாரியாக இருந்தார்.

இதற்கு முன்பு இரு தடவைகள் அவர் இக்கழகத்தின் ஆக்டிங் டைரக்டராக வேலைபார்த்திருக்கிறார்.

பிரபல பெண் விஞ்ஞானி மரணம்

லண்டன், நவ 16

பிரபல சோவியத்பெண் விஞ்ஞானி லிமன் ஷனுஷியர் 47-வது வயதில் டிப்ளிஸில் காலமானார். அவர் ஸோவியத் விஞ்ஞான கழக மெம்பர் பார்லிமெண்டு மெம்பருங்கூட.

அரிய நூல் வெளிவந்து விட்டது!

பாக்கிஸ்தான் விளக்கம்

ஜனாப் துர்ராணி அவர்களால் எழுதப்பட்ட "MEANING OF PAKISTAN" என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு பாக்கிஸ்தானைப் பற்றி இம்மாதிரியான நூலொன்று இதுவரை தமிழில் வெளியானதில்லை.

அழகிய முகப் படம்

320 பக்கங்கள் கிளேஸ் கடிதம்

சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

முந்துங்கள் விலை ரூ. 3-50

இந்தியா ரூ. 3-8-0.

V. P. வேறு

கிடைக்கும் இடங்கள்:-

V. M. ஷம்சுத்தீன்,

85, பழைய சோனகத்தெரு, கொழும்பு.

எல். கே. ஷேக் முகம்மது,

பிரதர்ஸ் (மரைக்கார் கடை)

பூக்குளம் பார்க்கிற்கு எதிரே

திருச்சினாப்பள்ளி.

விமான விபத்து

எழுவர் பலி

வெல்மிஸடன் டெலவார், நவ. 18

நியூகாசில் விமான நிலையத்தில் ஏற்பட்ட ஓர் விமான விபத்தின் காரணமாக எழுவர், இறந்துபோய் விட்டதாகத் தெரிகிறது. [ராய்ட்டர்]

பூகம்பம்!

லாஸ் ஏஞ்சல்ஸ், நவ. 18

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஒரு பலத்த பூகம்பம் இன்று ஏற்பட்டது. (ராய்ட்டர்)

எவ்வித வைபவங்களுக்கும் எவ்வித விருந்துகளுக்கும் முற்றும் பொருத்தமானது!

ஊக்கத்தையும் சந்தோஷத்தையும் உண்மையாகக் கொடுக்கும்

சாஸ்திரீய முறையில் வடிக்கப்பட்டது. குளிர்ச்சியைக் கொடுக்கக் கூடியது.

தேச முழுவதும் யாவரும் விரும்பி பாவிப்பது.

தயாரிப்பவர்கள்:-

விற்ரோ ப்ரொடெக்ஸ் கம்பெனி லிமிடெட்., தெஹிவளை.

பிடிச் சக்கரவர்த்தி.

த.பி. சொக்கலால் ராம்சேட் பீடி

2 பீடிரிங்லேபில்

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது

இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும் இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,

71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.

Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸ்தர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்குக் கடிதம்

ஐயா,

தமிழருக்கும் நற்காலம் உதயமாகின்றது அன்றும், இன்று காங்கிரசின் ஜீவநாடியாக நின்ற மாணவ, மாணவிகளின் எதிர்கால வாழ்க்கைக்கு அஸ்திவாரமிடப் போகின்றார் திரு ஜீ ஜீ. அன்று ஸர் பொன் இராமனாதன் கனவில் கண்ட "பல்கலைக் கழகத்தை" இன்று உருவாக்க ஊக்கங் கொள்கின்றார் ஜீ ஜீ என்ற தலைப்புக்கு தோடு "சுதந்திரன்" ஒரு நாள் மலர்ந்தது அன்று உணர்ச்சி உள்ள உள்ளங்களில் உவகை பூக்கதிக்கும்.

தமிழனின் தனிப் பெருமையை இலங்கை முதல், இங்கிலாந்து வரை நிலைநாட்டி வைக்த, தவப் புதல்வனின் புனித நோக்கு புனிதமடையும். தமிழனின் தூக்கங் கலைத்த, அணையின் அடி ஆழை புறத்திலும் மலரட்டும் உலகத்தில் உத்தமர்கள் நினைக்க தவவ, நிலை தவறாத என்ற உண்மை உறுதியாகட்டும் அதுவும் இன்றைய தமிழ் தலைவனால் உருவாகும், இது முயற்சி வரவேற்கத்தக்கதே

ஒருகாலத்தே ஈழத்திலே தமிழன் தலைதூக்கநினைக்கான். ஆனால் சில சுயநல அரசியல்வாதிகள் அதற்கும் முற்றுப்புள்ளி போட்டார்கள். ஆனால் மீளா அடிமைப்பட்டான். உய்ய வழியற்று உரிமைகள் பறிக்கப்பட்டு விட்டது. இலங்கையை விட்டு விட்டு ஓடடங்கொள் என்ற சத்தம் தென்பகுதியில் தலைகட்டத் தொடங்கி விட்டது. இந்நெருக்கடியான காலத்தில் திரு. பொன்னம்பலமும், தமிழ் காங்கிரஸும் தூங்கும் தமிழரை தட்டி எழுப்பிக் கொண்டிருந்தது. அதனால் எதிர்பார்த்த ஒற்றுமை ஏற்பட்டுவிட்டது. போலித் தமிழர் கூட்டம் தகர்க்கப்பட்டு விட்டது. இன்னும் நாம் ஒற்றுமையை கொண்டால், "பல்கலைக் கழகம்" அல்ல இன்னும் எத்தனையோ ஸ்தாபனங்கள் உருவாக்கலாம்.

மேலும் தமிழனின் கலை, பண்பு, நாகரீகம் இவைபோன்ற பொக்கிஷங்கள் போற்றப்பட வேண்டுமானால், மறைந்து போன சுதந்திர வாழ்க்கையைத் திரும்பப் பெறவேண்டுமானால் யாழ்ப்பாணத்தில் சர்வகலாசாலை அவசியம் வேண்டியதுதான் ஏன் - யாழ்ப்பாணம் ஈழத்தின் கலைக் கோவிலென்றால் அது மிகையாகாது. ஆறுமுக நாவலர் தோன்றிய நாட்டில், அரசியல் அறிஞர் ஸர் பொன். இராமநாதன் பிறந்த நாட்டில், இன்னும் எத்தனையோ புலமை கொண்டோரை கொண்ட நாட்டில் ஓர் சர்வகலாசாலை இல்லாதது துர்அதிஷ்டந்தான்.

இன்னும் எத்தனையோ வாலிபர்கள் போதிய பொருளாதாரமையால் வேறு சர்வகலாசாலைகளில் சேரமுடியாமல் திண்டாடுகிறார்கள். அக்குறைகளை நிவிர்த்தி கொள்ளப் போகின்றது. அதனால் வருங்காலத்தே உத்நாட்டில் குறைந்த செலவோர் அவர்களின் ஆசைநிறைவேறும் அதனால் நாட்டில் கலைவளரும் கலையோங்க செல்வமோங்கும் நாடுசெழிக்கும். அந்நாள் எந்நாள் வருமோ!

இங்ஙனம்,
மு. சபாரத்தினம்
திரிகோணமலை,
7-11-47.

மைலிட்டிக்கு தேசிய சேமிப்பு சங்கம்

யாழ்ப்பாணம், நவ. 18

மைலிட்டி பாலர் ஞாபகார்த்த சங்க வித்தியாசாலையில் திரு. என். பொன்னையா தலைமையில் மைலிட்டி கிராமச் சங்க பகுதி பொது மக்கள் கூட்டமொன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு என். பொன்னையாவைத் தலைவராகக் கொண்ட ஒரு தேசிய சேமிப்பு சங்கம் அமைக்கப்பட்டது. இதற்கு ஒரு பிரதிநிதிகள் கமிட்டியும் திரு என். கந்தையா காரியதரிசியாகவும் தெரியப்பட்டனர்.

தேசிய சேமிப்பின் முக்கியத்துவம்பற்றி யாழ்ப்பாண டிஸ்ட்ரிக்ட் அமைப்பாளர் முகாந்திரம் திரு வி. தியகராஜா இக்கூட்டத்தில் பேசினார்.

பழைய சாக்குகள் ஏற்றுமதி

இந்திய சர்க்காரிடம் இலங்கைச் சர்க்கார்முறையீடு

கொழும்பு, நவ 19

இந்தியாவில் உற்பத்தியாகும் சணல் சாக்குகளை பல நாடுகளுக்கு பங்கீடு செய்வதற்கு வசதியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் பொருட்டும் தென்னாப்பிரிக்காமீது இந்தியா வர்த்தகத் தடை நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதாலும் இலங்கைக்கு இந்தியா அனுப்பும் சாக்குகளை இலங்கையிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை இந்தியச் சர்க்கார் தடைசெய்திருந்தார்கள்.

இலங்கையில் பழைய சாக்குகள் அதிகமாக வந்து குவிவதாலும் அவைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாவிடில் நஷ்டமேற்படுவதாகவும் வியாபாரிகள் மந்திரியிடம் முறையிட்டதன் பேரில் இவ்விஷயத்தைப்பற்றி இலங்கை சர்க்கார் இந்திய சர்க்காருக்கு முறையிட்டிருக்கின்றனர்.

பிரதமர் மாளிகை திருத்துவதில் துரிதம்

பொது மக்களுக்கு விடுகட்டுவதில் தாமதம்

அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, நவ 19

பிரதமர் மாளிகையான "டெம்பிள் ட்ரீஸில்" அதிவேகமாக வேலைகள் நடைபெறுவதும், பொது ஜனங்கள் குடியிருப்புப் பிரச்னை சம்பந்தமாக அரசாங்கம் மந்தமாக தாமதிப்பதும் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் திரு. பீட்டர் கெனமனால் சுட்டிக்காட்டப்பட்டது.

மேற்குறித்த கூட்டம் குடியனித தொரு கமியூனிஸ்ட் கட்சி அங்கத்தினரால் குடியிருப்புப் பிரச்னையைத் தீர்க்க கிளர்ச்சி செய்வதற்காகக் கூட்டப்பட்டது.

அவர் மேலும் பேசியதாவது:—

அரசாங்கம் மேலும் தாமதித்தால் வேறு வழியில்லை பொது ஜனங்கள் நேரடி நடவடிக்கை ஆயுதங்களை எடுக்க நேரிடும் வாடகை கொடா இயக்கம் ஆரம்பிக்கப்படும் அத்துடன் பெரிய வெற்று பங்களாக்களிலும், மாளிகைகளிலும் குடியேறிச் சத்தியாக்கிரகம் செய்ய நேரிடும். கறுவாக்காட்டில் எத்தனையோ பெரிய வீடுகளில் ஒரு சில அறைகள் மட்டுமே உபயோகிக்கப்படுகின்றன. முனிசிபல் சபை ஜீவியப் பிரதேசத்தை நிர்ணயிக்க அதிகாரம் பெறவேண்டும். உபயோகிக்கப்படாத இடங்கள் முனிசிபல் சபையினால் எடுக்கப்பட்டு உபயோகத்துக்கு விடப்படவேண்டும்

"அரசாங்கம், மக்களுக்கு வீடமைக்கும் திட்டத்தையே முதல் திட்டமாகக்கொள்ளவேண்டும் அதன் மூலம் வேலையிலாதார் பலருக்கு வேலையும் கிடைக்கும். 1941 வாடகை விதிகளை ஏறபடுத்தப்படவேண்டும்."

நகர சபை அங்கத்தினர்கள் டோரிக்குசா, ஜீ வேந்திரசிங்கம், எம் எஸ், அபூபக்கர், எம் ஜி மெண்டிஸ் முதலியோரும் டி ஹென்றி, என். ஷண்முகதாசன் முதலியோரும் அதன் பின் பேசினார்கள்.

இலங்கை-இந்திய தொழிலாளர் கூட்டம்

கம்பளை, நவ. 18

இலங்கை-இந்திய காங்கிரஸ் கம்பளை ஜில்லாக் கமிட்டி ஆதரவில் சின்ன அங்கமினத் தோட்டத்தில் திரு வி. என். பேரன் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பலர் பேசினார். இலங்கை-இந்திய தொழிலாளர் முன்னேற்றத்துக்கு எல்லோரும் ஒன்று கூடி உழைக்க வேண்டுமென்றும் சுதந்திர மனிதர்களாக இலங்கையில் வாழ்வோண்டுமென்றும் பலரும் கூறினார்கள்,

வர்த்தக வரி ஒப்பந்தங்கள்

இலங்கைக்கு என்ன பயன்?

ஹாவனா மகாநாட்டுக்குப் பிறகு தெரியவரும்

கொழும்பு, நவ 19

ஜினிவாவில் இலங்கையுடன் 23 நாடுகள் கையொப்பமிட்ட வரி ஒப்பந்தங்களால் இலங்கை எவ்விதப் பயனடையுமென்பதுபற்றி வர்த்தக மந்திரி திரு. சுந்தாலிங்கத்தை பத்திரிகை நிருபர் கேட்டபோது அவை யெல்லாம் ரகசியமென்று தெரிவித்து அவைகளைப்பற்றிய அபிப்பிராயங்களை கூறமறுத்து விட்டார் வரி விதிப்புக் கொள்கை சம்பந்தமாக மட்டும் இப்பொழுது ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்பட்டிருக்கிறதென்று ஹாவனா மகாநாடு முடிந்த பிறகு வரி விதிப்பு எவ்விதம் அனுஷ்டானத்திற்கு வருமென்று தெரிய வருமென அவர் அறிவித்தார்.

இலங்கை, மலேயா, இந்தியர் அந்தஸ்து

பண்டித நேரு அறிவிப்பு

புதுடில்லி, நவ 19—

நேற்று இந்தியா சட்டசபையில் பண்டித நேரு, எம் எஸ் ஆனே கேள்விக்குப் பதிலளிக்கையில் இலங்கை பிரதமர் இவ்வருஷ இறுதியில் டில்லி வருவதாக அறிவித்திருக்கிறாரென்றும், அதை வரவேற்பதாயும் மலேயா சமஷ்டி சபையில் இரு இருக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கவும் பிரஜாவுரிமை கிடைக்கச் சௌகரியமாகவும் பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்டிருப்பதாயும், புது அரசியல் சீர்திருத்தப்படி எல்லா மலாய் பிரஜைகளும் சமமாகப் பாவிக்கப்படுவதுடன், சமஉரிமை கொண்டிருப்பார்களென்றார்

டில்லியில் ராஜாஜிக்கு காமராஜ் விருந்து

புதுடில்லி நவ 19

டாக்டர் பட்டாபி சீதாராமையா, ஸ்ரீ காமராஜ் இருவரும் நேற்று ஆக்டிங் கவர்னர் ஜெனரல் ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரிக்கு விருந்தளித்தனர் ஸ்ரீ ஆர். கே ஷண்முகம் செட்டி ஸ்ரீ என். கோபாலசாமி அய்யங்கார், சென்னை மந்திரிகள், அரசியல் நிர்ணய சபை, அ. இ. கா. கமிட்டி ஆகியவற்றிலுள்ள சென்னை மாகாண மெம்பர்கள் ஆகியோர் வந்திருந்தனர்.

தோட்டத் தொழிலாளர் நிலைமை

நேரில் கண்டறிய திரு திவ் சுற்றுப்பிரயாணம்

கொழும்பு, நவ. 19

கொழும்புக்கு விஜயம் செய்துள்ள மலேயாவின் இந்திய சர்க்கார் பிரதிநிதியான திரு ஜான் ஏ திவி இலங்கை பிரதமர் திரு டி. எஸ். சேனாநாயக்காவையும் உள்நாட்டு மந்திரி ஸர் ஒலிவர் குணதிலகாவையும் சந்தித்துப் பேசினார். ஆசிய உறவு மகாநாட்டில் அவரது நண்பரான சுகாதார மந்திரி திரு எஸ் டபிள்யூ. ஆர். பண்டாரநாயகாவையும் சந்தித்தார்.

தோட்டத் தொழிலாளர் நிலைமையை நேரில் கண்டறியும் பொருட்டு அவர் இலங்கையின் இந்திய சர்க்கார் பிரதிநிதி திரு வி. வி. கிரியுடன் என்றகாலை கண்டிக்கும் நுவரெலியாவுக்கும் பயணமானார் புதன்கிழமையில் திரு திவி, சுபாஷ் சந்திரபோஸின் இந்தியா சுதந்திர லீக்கின் தலைவராக இருந்தவர். அவர் நவம்பர் 23-ம் தேதியன்று விமானத்தில் சிங்கப்பூருக்கு பயணமாவார்.

டோஜோ தம்பிக்கு சிறை!

டோக்கியோ, நவ 18

ஜப்பானிய மாஜி பிரதமர் டோஜோவின் தம்பி மீது யுத்தக் குற்றஞ் சாட்டி வழக்குத் தொடரப்பட்டது. அவர் இப்போது 18 மாத சிறைத் தண்டனை பெற்றுள்ளார்.

(ராய்ட்டர்)

பர்மா கமியூனிஸ்ட் கட்சி

சர்க்கார் கட்சியுடன் சமரசப் பேச்சு முறிவு

சோஷியலிஸ்ட் கட்சித் தலைவர் வர்த்தக மந்திரியானார்

ரங்கூன், நவ. 18

பர்மா சோஷியலிஸ்ட் கட்சித் தலைவர் உகோ ஜி இன்று வர்த்தக மந்திரியாகப் பதவி பேற்றார். வர்த்தக மந்திரி உபாதியான் நிதி மந்திரியானார் நிதி மந்திரியாகவும் அந்நியநாட்டு மந்திரியாகவுமிருந்த உடின் அந்நியநாட்டு மந்திரியாக மட்டுமிருக்கிறார்.

பிரபல பிரிட்டிஷ் வழக்கறிஞர்

லண்டன், நவ. 18

பர்மா மந்திரிகள் கொலை வழக்கின் முதல் எதிரி ஊ சாவுக்கு ஆதரவாகி விவாதிக்க பிரிட்டிஷ் பிரபல வழக்கறிஞரான திரு கர்டிஸ் பென்னட் இவ்வாரம் பர்மாவுக்குப் புறப்பட்டுச் செல்கிறார். இவருக்கு ஏராளமான கட்டணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பர்மா கமியூனிஸ்டுகள்

ரங்கூன், நவ 18

பர்மாவில் அரசியல் ஒற்றுமையை நிறுவும் பொருட்டு பர்மா சர்க்கார் கட்சியான பாசிஸ்ட் எதிர்ப்பு சுதந்திர லீக்கும் பர்மா கமியூனிஸ்ட் கட்சிக்குமிடையே நடைபெற்ற சமரசப் பேச்சு முறிந்து விட்டது நாட்டின் குழப்பத்திற்கு கமியூனிஸ்டுகள் உட்படாக இருந்து அந்தரங்கமாக வேலைசெய்து வருவதாக பாசிஸ எதிர்ப்பு சுதந்திர லீக்கினர் குற்றஞ்சாட்டுகிறார்கள்

கமியூனிஸ்ட் கட்சித் தலைவர் தக்கின்டான்டுன் 11 நாட்களுக்கு பிரசாத் திட்டம்போட்டு நாடெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்வார்.

மியோசிக் கட்சியும் டோபாமா கட்சியும் சுதந்திர பேரமுதல் என்ற கட்சியாக இணைந்து பர்மா மந்திரிகள் கொலையில் சம்பந்தப்பட்டதால் அதன் தலைவர்கள் இப்பொழுது சிறையிலிருக்கிறார்கள் தீவிர கமியூனிஸ்ட் கட்சியான செங்கொடிக்கட்சியை சர்க்கார் சட்டவிரோதமாக்கி விட்டதால் அதன் தலைவர்சைனுவுக்குஓடிப்போய் அங்குள்ள கமியூனிஸ்டுகளுடன் சேர்ந்துகொண்டார்.

(ராய்ட்டர்)

"ஸ்பெயினோடு தொடர்பு வேண்டாம்" தீர்மானம்

பாசிஸத்துக்கு அமெரிக்க ஆதரவு

பிளஷிங் மெடோன், நவ. 18

ஐ. நா. சபையில் ஸ்பானிஷ் பாசிஸ சர்க்காரோடு எல்லா நாடுகளும் தம் தொடர்புகளை அறுத்து ஸ்தானிகர்களை வாபஸ் பெற வேண்டும் என்ற தீர்மானம் இன்று 29 வோட்டுகளை பெற்றது. எதிர்ப்பு வோட்டுகளின மொக்க தொகை 16 தீர்மானம் 3-ல் இரண்டுபங்கு வோட்டுப் பெற்றதால நிராகரிக்கப் பட்டுவிட்டது.

எதிர்த்து வோட்டளித்த பெரிய வல்லரசு அமெரிக்காமட்டுமே. அமெரிக்காவை ஆதரித்த வைகளில் ஆஸ்திரேலியா கானடா, தென்னாப்பிரிக்கா ஆகியவை முக்கியமானவை.

(ராய்ட்டர்

வியட்நாம் சுதந்திரப் போர்

200 பிரெஞ்சு துருப்புகள் கொல்லப்பட்டன

சைகோன், நவ. 18

நேற்று வியட்நாம் படைகள் பிரெஞ்சுத் துருப்புகளைத் தாக்கிப் போராடியதில் 200 பிரெஞ்சுத் துருப்புகள் கொலைப்படனரென்று வியட்நாம் ராணுவ அறிக்கை கூறுகிறது வியட்நாம் படைகள் குவாங் நாம் மாகாணத்தில் வடக்கிலும் மேற்கிலும் ஹோயான் துறைமுகத்தையும் தாக்கின

[ராய்ட்டர்]

தீ விபத்து

38 பிரேதங்கள் கண்டு பிடிக்கப்பட்டது

வெலிங்டன், நியூஜிலந்து, நவ 19

இங்கு ஏற்பட்ட ஒரு தீவிபத்தின் காரணமாக 46 பேர் காணாது போய்விட்டார்கள்.

இது வரை முப்பத்தெட்டு பிரேதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில ஒன்றே அடையாளங் கண்டுபிடிக்கப்பட்டது இத் தீ விபத்து ஒரு பண்டகசாலையில் ஏற்பட்டது.

(ராய்ட்டர்)

கிங்ஸ்லியில் தனசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங்கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த

கன்னிகா

தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்

என் எஸ் கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம் எஸ் சகீராஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என் ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது

சயாம் மன்னரைக் கொல்லச் சதி

சுவிட்ஜர்லந்து சர்க்காரின் பந்தோபஸ்து ஏற்பாடு

சிங்கப்பூர், நவ 18

சயாமின் 20 வயதுள்ள மன்னர் பூமிபோன் அதுலத்தை மலையுச்சியிலிருந்து கீழே தள்ளிக் கொன்று அதை ஒரு விபத்து என்று சொல்லி மறைக்க சதியாலோசனை செய்யப்பட்டு வருவதாக சயாம் தளபதி சங்ராம் தெரிவித்தார். பாங்கக் கிருபர் அனுப்பிய இச்செய்தியை 'ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ்' பத்திரிகை வெளியிடுகிறது அவரைக் கொல்ல முற்சித்து வரும் சதிகாரர்கள் மன்னர் வசிக்கும் லாசேன் நகருக்கு புறப்பட்டுப் போய்க்கொண்டிருப்பதாக தளபதி சங்ராம் சுவிட்ஜர்லந்திலுள்ள சயாம் மன்னர் அதுலத்துக்கு முன்னெச்சரிக்கை செய்தி அனுப்பியிருக்கிறார்

மன்னருக்கு பந்தோபஸ்து

லாசேன், நவ 18

லாசேன் சர்வ கலாசாலையில் சட்டம் மாணவராகக் கல்வி பயிலும் சயாம் மன்னர் அதுலத்துக் கொலை செய்ய சதி நடைபெறுவதாக சயாமிலிருந்து முன்னெச்சரிக்கைச் செய்தி கிடைத்ததும், சுவிட்ஜர்லந்து சர்க்கார் மன்னரின் உயிரைப் பாதுகாக்க பலமான பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். [ராய்ட்டர்]

சீன தளபதிகள் மாற்றம்

உள்நாட்டுயுத்தத்தில் பெரும்போர் நிகழும்

கமியூனிஸ்டுகள் முனனேற்றம்

நாங்கிங், நவ. 18

சீன உள்நாட்டு யுத்தத்தில் புதியபெரும்போர்நிகழுமென்று தெரிகிறது. வடசீனத்தில் சீன ராணுவத் தலைமைக் காரியாலயத்தார் தளபதிகளை மாற்றி அமைக்கிறார்கள். பொஞ்சுவருக்குத் தெற்கே கூடிய சீகலரம் சீனப் படைகள் பெருந்தாக்குதலை ஆரம்பிக்கும்.

ஷான்ஸி மாகாணத்தின் தலைநகரான தையுவானை நோக்கி கமியூனிஸ்ட் துருப்புகள் பல திசைகளிலிருந்தும் முன்னேறி வருகின்றன.

ஷான்ஸி மாகாண கவர்னரின் தலைமை ஸ்தலத்தை நோக்கி ரயில்பாதைவழியாக ஹோப்பாய் எல்லையிலிருந்து ஏராளமான கமியூனிஸ்ட் துருப்புகள் கிழக்கு நோக்கி முன்னேறி வருகின்றன. ஷான்டுங் மாகாணத் தலைநகரருகிலும் கோவ மிஞ்சாயிலேவ ஸடேஷனருகிலும் பலத்த போர்கள் நிகழுகின்றன. ஷான்டுங் மாகாணத்தை ஊடுருவிச் செல்லும் டீன்ஸ்டின்—கிக்கோ ரயில்பாதை பழுதுபார்க்க முடியாதபடி பலத்த சேதமடைந்திருக்கிறது.

[ராய்ட்டர்]

பெரிய வல்லரசுகளின் விசேஷ அதிகாரம்

புனராலோசனை ஐ. நா. சாஸனத்தை முறியடிப்பது

சோவியத் எதிர்ப்பு

லேக்ஸக்ஸஸ், நவ. 18

பெரிய வல்லரசுகளின் தீர்மானங்களை ரத்தாக்கும்விசேஷ அதிகாரப் பிரச்னை நிகழ்ச்சி நிரலில் இருந்து விலக்கப்படாவிட்டால் 'எல்லாருக்கும் பாதகமான பலன்கள் ஏறபடும்" என சோவியத் பிரதிநிதி அண்ட்ரி குரோமிக்கோ இன்று குறிப்பிட்டார்.

உக்ரைனும் பேலாரூஸும் அமெரிக்காவின் இம் முயற்சி ஐ. நா. சபையின் சாஸனத்தைக் திருத்தும் முயற்சி என கூறிக் கண்டித்தன.

இப் பிரச்னையை சோவியத் எதிர்ப்போடு நிறுவப்பட்ட 'குட்டி அசெம்பிளி'யில் ஆலோசிக்கவேண்டுமென அமெரிக்கா அரசியல் கமிட்டியிடம் தெரிவித்துள்ளது. [ராய்ட்டர்]

வட்டுக்கோட்டை பிரதிநிதிக்கு வரவேற்பு

சுதுமலையில் பொதுக் கூட்டம்

மானிப்பாய், நவ, 19

மானிப்பாய், ஆனைக்கோட்டை சுதுமலைப் பகுதி மக்கள் வட்டுக்கோட்டை தொகுதி பாராளுமன்ற பிரதிநிதி திரு கே கனகரத்தினம் அவர்களுக்கு ஒரு வரவேற்பளித்தனர்.

சுதுமலை தமிழ்க் காங்கிரஸ் கிளை ஸ்தாபனத்தின் உதவி தலைவர் திரு பொ. அம்பலவாணர் பிரதிநிதியை வரவேற்று மாலை சூட்டினார் பின்னர் மங்கள வாத்திய சகிதமாக மக்கள் அவரை மானிப்பாய் சந்தியில் இருந்து ஊர்வலமாக சுதுமலை அம்பலப்பாரசி வித்தியா சாலைக்கு அழைத்துச் சென்றனர்

இதன் பின்னர் பண்டிதர் திரு ஆ. சி. நாகலிங்கம்பிள்ளை அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அன்பே உலகை ஆளுமென்று தலைவர் குறிப்பிட்டார்.

மானிப்பாயைச் சேர்ந்த திரு கணபதி கதிரவேற்பிள்ளையும் பேசினார். பிரதிநிதி திரு கே கனகரத்தினம் பேசுகையில் சமூக பொருளாதார விஷயங்களையும் தேச மக்களின் குறைகள் சமூக ஒற்றுமையினம் முதலிய வற்றையும் விளக்கமாக எடுத்துக் கூறினார். திருவள்ளர்கள் ஆறுமுகம் செல்லையா, இ. வீ ஆறுமுகம் ஆகியோரது நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிவெய்தியது,

ஆட்டிறைச்சியில் கொள்ளை லாபமடிக்க முயற்சித்தாராம்

எதிரிக்கு ரூ 750 பிணை

கொழும்பு, நவ 19

புறக்கோட்டையைச் சேர்ந்த ஒரு இறைச்சிக் கடையில் உள்ள விற்பனையாளர் ஆட்டிறைச்சியில் கொள்ளை லாபம் அடிக்க முயன்றதாக விலைக் கட்டுப்பாட்டதிகாரி ஒருவரால் குற்றஞ்சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கு கொழும்பு தற்காலிக பிரதம மாஜிஸ்டிரேட் திரு வி. டி. பண்டிதகுணவர்தனா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரி தாம் குற்றவாளியல்லவென்று கூறியதால நீதிபதி அவரை ரூ 750 பிணையில் போக விடுத்து வழக்கை டிசம்பர் 3-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

சோவியத் தேர்தல்கள்

ஸ்டாலினின் நியமனப் பத்திரம் தாக்கல்

மாஸ்கோ, நவ. 18

சோவியந் ரஷியாவில் தேர்தல் முஸ்தீபுகள் நடந்துகொண்டிருக்கின்றன. டிசம்பர் 21-ம் தேதி தேர்தல் நடக்கும்.

பிரதமர் ஸ்டாலின், மொலட்டோவ் ஆகியோரின் நியமனப் பத்திரங்கள் இன்று மாஸ்கோவில் தாக்கல் செய்யப்பட்டன. மாஸ்கோ பகுதித் தேர்தல் கூட்டங்களுக்கு 8 லட்சத்து 13 000 பேர் இது வரை சமுகமளித்தனர். 29 ஆயிரம் கமியூனிஸ்டுகளும் சுயேச்சை வேட்பாளர்களும் இவற்றில பேசினார்கள்.

[ராய்ட்டர்]

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் ஆண்டு நவம்பர் மீ 20உ இந்த பத்திரிகை 194A. பட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்ட்ரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

தேவை.

1. ஆரியர்: தராதரப் பத்திரம் பெற்ற பெண் ஆசிரியை (சங்கீதம் தையல் முதலியவற்றில்) தேர்ச்சியுடையவருக்கு விசேஷ சலுகை காண்பிக்கப்படும்.

2. ஆங்கில ஆசிரியர் (S. S. C. English or Equivalent Examination)

விண்ணப்பங்கள் 25-11-47 க்கு முன் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

அதிபர்,
விவேகானந்த வித்தியாலயம்,
அநுராதபுரம்.
(Advt)

ஹோட்டலில் குண்டு வீச்சு

பிரிட்டிஷ் மேஜர் கொலை

இஸ்மேலியா, நவ. 18

இங்குள்ள "கிங் ஜியார்ஜ் ஹோட்டலில்" ஒரு வெடிகுண்டு வெடித்தது. அதன் காரணமாக 9 பிரிட்டிஷார் காயமுற்றனர். நாற்காலிகளும் மேஜைகளும் அதிர்ச்சியினால் எற்றி எறியப்பட்டன. இது சம்பந்தமாக ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

மேஜர் கொலை

கெய்ரோ, நவ. 18

ஒரு பிரிட்டிஷ் மேஜர் பாயிக் என்னும் இடத்தில் உள்ள தமது வீட்டு வராந்தாவில் உணவருந்திக்கொண்டிருக்கும் போது இனந்தெரியாத ஒருவரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இஸ்மேலியா ஹோட்டல் சம்பவம் சம்பந்தமாக இங்குள்ள முஸ்லிம் சகோதரத்வகாரியாலயம் சோதனையிடப்பட்டது. இது பிரிட்டிஷாருக்கு விரோதமான ஒரு தேசிய இயக்கமாகும். (ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org